# முன்னாள் செயலாளரின் முகாரி!

## சீடர்களைக் குட்டும் காங்கிரஸ் குருநாதர்!

## எம். எல். ஏ.க்களுக்காக நடத்தப்பெறும் எம். எல். ஏ.க்கள் சர்க்கார்!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (1—11—49) | வெளியீடு (2—11—49) | இதழ் 79

## கிழக்குப் பஞ்சாப் சர்க்காருக்குச் சட்டசபையினர் சர்ட்டிபிகேட்!

"சில காங்கிரஸ்காரர்களும், எம். எல். ஏ.-க்களும் சிறிய லாபங்களுக்கு ஆசைப்பட்டு தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதை நான் பலமுறை கண்டித்திருக்கிறேன். மேலும் இப்பொழுது அப்படிப்பட்ட கள்ள பேரங்களைப் பற்றிய முழு புள்ளி விவரங்களையும் சேகரிப்பதற்கு வழி செய்துள்ளேன்." —பட்டாபி.

"காங்கிரஸ் கோட்பாடுகள் புறக்கணிக்கப்படுகின்றன. காந்தீயக் கொள்கைகளை உதறித்தள்ளி விட்டது. பொது மக்களுக்கு அளித்த தள்ள வாககுறுதியை நிறைவேற்றக் காங்கிரஸ் தவறிவிட்டது. எனவே, பொது மக்கள் முகத்தில் விழிக்க, காங்கிரஸ் ஊழியர்கள் அஞ்சுகிறார்கள்."

"முன்னணியில் இருக்கிற காங்கிரஸ் பெருந்தலைவர்களின், சுயநல வேட்டை, திறமையின்மை, லஞ்சம், ஒழுங்கீனம், சொந்தக்காரர்களுக்கு உத்தியோகம் தேடுவது போன்ற ஒழுக்ககேட்டினால்தான் காங்கிரஸ் மதிப்பிழந்து வருகிறது" —பாபு பாஷான் சிங்—

"கிழக்குப்பஞ்சாபிலிருக்கிற காங்கிரஸ் சர்க்கார், மக்களாட்சி முறைப்படி நடைபெறுகிற சர்க்கார் அல்ல. எம். எல். ஏ.-க்களின் நன்மைக்காக எம். எல். ஏ.-க்களால் நடத்தப்படும் சர்க்காராகும். கி. பஞ்சாப் சர்க்கார், எம். எல். ஏ.க்கள், அவர்களுடைய சுற்றத்தார்கள் முதலியவர்களுடைய நலன்களை கவனித்துக்கொள்வதைத் தவிர, வேறு எவர் நலத்தைக் குறித்தும் எந்த நேரத்திலும் கருதினது கிடையாது. —சர்தார் சஜான்சிங்—

கட்டுரையில் முதல் வரிகளைப் பேசி உள்ளவர் அனைத்து இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான டாக்டர் பட்டாபி சீதாராமையா வாகும். காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் சுய நலப் புலிகளாக இருக்கிறார்கள் என்று காங்கிரஸ் ராஷ்டிரபதியே, ஒளிவு மறைவில்லாமல், குற்றம் சுமத்துகிறார். போதிய ஆதாரமில்லாமல் இவ்வளவு வெளிப்படையாக, துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் குற்றஞ்சாட்டுகிறார் டாக்டர் பட்டாபி, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களைப் பார்த்து.

காங்கிரஸ் உறுப்பினர்கள் சுயநல வேட்டையாடுவதைக் கூட மன்னித்துவிடலாம், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலே நீதியும் நேர்மையும், இடம் பெற்றிருக்குமானால். பிறர் நன்மைகளுக்குக் கேடு சூழாத நிலையில், காங்கிரஸ் எம். எல். ஏ.க்களின் சுய நலப்பணி நடைபெறுமானால், "ஏதோ பல காலமாகப் பாலைவனத்திலே அலைந்து திரிந்தார்கள், இன்று அந்த நிலையில், மாற்றம் ஏற்பட்டிருக்கிறது; காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளட்டும்; மீண்டும் இந்த வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கவா போகிறது." என்று, நாம்கூட இவர்கள் கூடா நடத்தைக்கு இரக்கங்காட்டலாம். ஆனால், சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள், 'தவறான செயல்களை'க் கையாண்டுதான், சுயநலத்தைப் பேணுகிறார்களாம். பட்டாபியின் படப்பிடிப்பு இவ்வாறு இருக்கிறது!

பல மணி நேரமாகத் தாக விடாயினால் தத்தளித்துக் கொண்டிருந்தவர்கள், தண்ணீரைக் கண்டதும்—பருகும் நிலையில் உள்ளதுதானா என்று கூட கவனிக்காமல்—கொஞ்சம் பரபரப்பாகத்தான் பருகுவார்கள். தூய்மையற்றத் தண்ணீராக இருந்தாலும்! இதைப் போலவே காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும், ஆரம்பத்தில், சுயநலம் கருதி, ஒன்றிரண்டு தடவைகளில், திக்குதிசை தெரியாமல் தவறிச் சென்று விட்டாலும், நாளாகவாக நல்வழிக்குத் திரும்பிவிடுவார்கள் என்று எவரும் நம்பத்தான் செய்வார்கள். அதற்கும் இடமில்லாமல் இருக்கிறது என்று ராஷ்டிரபதியே சுட்டிக்காட்டுகிறார். காங்கிரஸ் கட்சியினரும், சட்டசபை உறுப்பினர்களும், ஆடிவரும்சுயநலவேட்டையை அடிக்கடி கண்டித்து வருகிறாராம் டாக்டர்! திருத்தம் பெறும் வழி ஏற்படவில்லையாம். எனவே, பிழை செய்பவர்களின் புள்ளி விவரங்களை சேகரித்துக் கொண்டிருக்கிறாராம் டாக்டர் பட்டாபி. சுயநல வேட்டையாடும் நோய்-

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

# பட்டாபியின் பகல் வேஷம் கலைகிறது!

## மூவர் கமிட்டித் தீர்ப்பு முழுப் பித்தலாட்டம்!

## ஆந்திரரின் பேராசைக்குப் பட்டாபியின் பரிவு!

"சென்னை நகர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இருக்கும் நல்ல வழி சென்னை நகரையும் அதையடுத்துள்ள செங்கற்பட்டு மாவட்டத்தின் இரு மொழி பேசப்படும் வட்டாரத்தையும் ஒன்றாக இணைத்துத் தனி மாகாணமாக்குவதே"

"உடனே ஆந்திர மாகாணம் வேண்டுமென்று ஆந்திரர்கள் விரும்பினால் சென்னை நகர உரிமையை அவர்கள் கைவிடவேண்டும் என்று மூவர் கமிட்டி அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அறிக்கையைக் கூர்ந்துபடித்தால் பம்பாயைப் போல சென்னையையும் நகர மாகாணமாக்குவதே கமிட்டியின் உட்கருத்து என்பது புலனாகும்."

"மூவர் கமிட்டியினர் எத்தகைய முடிவும் செய்யாது, 'சென்னை நகரின் எதிர்காலம் என்னவாகும் என இப்பொழுது கூறுவதற்கில்லை. வருங்காலத்தில் விவாதித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம் எனக் கமிட்டி குறிப்பிட்டுள்ளது. மூவர் கமிட்டி அறிக்கையின் எந்தப் பகுதியிலும் சென்னை நகரின் எதிர்காலம் பற்றிக் குறிக்கப்படவில்லை. ஆந்திரர்கள் தற்காலிகமாக உரிமையைக் கைவிடவேண்டும் எனத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திரர்கள் நகர உரிமையைக் கைவிட வேண்டுமென்று கூறப்பட்டதால் நகரத்திலுள்ள 4 லட்சம் ஆந்திரர்களைப் பற்றி அக்கறையற்றிருக்க வேண்டும் என்று கூறப்படவில்லை."

என்று அண்மையில் பட்டாபி சீதாராமையா பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோது குறிப்பிட்டிருக்கிறார். தோழர் பட்டாபி சீதாராமையா அவர்கள் மூவர் கமிட்டி அறிக்கைக் காததாக்களுள் ஒருவர். எனவே, பட்டாபியாரின் இந்தப் பேச்சை யாரும் அலட்சியமாகக் கருதுவதற்கில்லை. மூவர் கமிட்டி ஆந்திரர்களுக்கு நல்லறிவூட்டி, சென்னையைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் பேராசைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவல்லது என்று பலரும் நம்பினர். ஆனால் தற்போது பட்டாபியார் வெளியிட்டிருக்கும் கருத்தைப் பார்க்கின்றபோது மூவர் கமிட்டியின் தீர்ப்பே முழுப் பித்தலாட்டமானது என்று நினைக்கவேண்டியதாக இருக்கிறது.

"நான் அடிப்பதுபோல் அடிக்கிறேன், நீ அழுவதும்போல அழு" என்ற முறையிலே பட்டாபியார் ஆந்திரர்களைப் பார்த்து 'சென்னைமீது ஆசை வைக்காதீர்கள்' என்று இதோபதேசம் செய்வதும், அதைக் கண்டு பிரகாசம்காரு போன்ற ஆந்திரத் தலைவர்கள் சீறுவதும், எதிர்ப்பு அறிக்கைகள் விடுவதும் ஆன நாடகம் நடத்தப்பட்டது கொஞ்சகாலம்!

இப்பொழுது அந்த நாடகம் முடியும் கட்டம் நெருங்கியுள்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஏழைகளுக்குமா சம்பள உயர்வு?

## முதலில் கேட்டு விட்டதற்கு வருந்துகின்றனர் 'தேசபக்தர்கள்'

சென்னை நகராண்மைக்கழகச் சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு தரப்படவேண்டுமென்று அண்மையில் நடந்த சென்னை நகராண்மைக் கழகச் சிறப்புக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களும் இத்தீர்மானத்திற்கு வாக்களித்தனர். அவர்கள், அவ்வாறு ஏழைச் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்ற தீர்மானத்திற்கு ஆதரவளித்ததற்காக இப்போது வருந்துகின்றார்களாம். எப்படியிருக்கிறது காங்கிரஸ்காரர்களின் போக்கு? உணர்ச்சி வேகத்தில் அப்போது ஏழைகளுக்கு ஆதரவு காட்டிவிட்டனர். இப்போது அதற்காக வருந்துகின்றனர் என்றால் இந்தக் காங்கிரஸ்காரர்கள் செய்யும் எந்த முடிவாவது அல்லது திட்டமாவது நடைமுறையில் வரும் வரை அப்படியே இருக்க முடியுமா?

முதலில் மக்கள் மனத்தை மயக்க ஒன்றைக்கூறுவது, செய்வது, பிறகு, அந்தவேகம் மக்கள் மனத்தினின்று அகன்றவுடன், அதைச் செயல் முறைக்குக் கொண்டுவராமல் நிறுத்தி விடுவது அல்லது மாற்றி விடுவது என்னும் நிலைமையில் தான் காங்கிரஸ்காரர்களின் போக்கு அமைந்திருக்கிறது. இவ்வாறு அரசியல் நிர்ணய சபையிலேயே பலமுறை முதலில் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதும், பின்னர் அதை மாற்றுவதுமாக இருக்கையில், இந்த மட்டும் ஒரே நிலையில் மனம் மாறாமல் காங்கிரஸ்காரர்கள் செயலாற்றுவார்கள் என்பதை எப்படி எதிர்பார்க்க முடியும்! அதுவும் ஏழைச் சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு தரும் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் அவ்வளவு அக்கறை காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பதே தவறாகவன்றோ இருக்கிறது. அப்படி எதிர்பார்ப்பது தவறு என்பதைத்தான், சென்னை நகராண்மைக் கழகக் காங்கிரஸ் அங்கத்தினர் போக்கு மெய்ப்பிக்கிறது. இதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் ஏழைகளைப்பற்றிப் பேசும் பேச்சுக்கள், பின்னால் வருந்தி அதனால் மாற்றப்பட்டுவிடாமல் நடைமுறைக்கு வந்து விடும் என்று ஓரளவுக்காவது எதிர்பார்க்க முடியுமா?

மாலை மணி

சென்னை 1—11—49 செவ்வாய்க்கிழமை

# மாசடைந்த மாணவர் உலகு! (2)

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களில் ஒரு சாரார் கழக ஸ்தாபகர் தினமான 24-10-49-ல் நடத்திய அக்கிரமச் செயல்களுக்குக் கூறப்பட்ட இரு காரணங்களையும், நேற்று விரிவாக ஆராய்ந்திருந்தோம். அதாவது, மாணவிகள் விடுதிக்குச் செல்லும் பாதையில் தடுப்புச் சுவர் எழுப்பினது கூடாது என்றும், இரவுபகல் எந்த வேளையிலும் விடுதியை விட்டு மாணவர்கள் வெளியில் சென்று வருவதற்குத் தடையாக இருக்கும் வாயிற்படிக் கதவுகளையும் நீக்கிவிட வேண்டுமென்றும், இரு கோரிக்கைகளின் பொருத்தமற்றத் தன்மையை நன்கு எடுத்துக் காட்டியிருந்தோம்.

கலகக்கார மாணவர்கள் புரிந்த செயல்களையும், துணைவேந்தர் நடந்து கொண்ட உயர்ந்தப் போக்கினையும், கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டமாணவர்களுக்குக் கல்வி அமைச்சர் இட்ட கட்டளையையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியம் என்று கருதுகிறோம்.

சில கோணல் புத்தி படைத்த மாணவர்களுக்குப் படுவது போலவே, சுவரை இடித்தெறிய வேண்டியதும் கதவை உடைத்தெறிய வேண்டியதும், அரும்பெரும் கோரிக்கைகளாக இருந்தாலும், அந்தக் கோரிக்கைகள் வெற்றியடைவதற்கு மாணவர்கள் என்ன செய்திருக்கவேண்டும். துணை வேந்தரை அணுகி, அமைதியான முறையிலேயே தமது கட்சியை எடுத்துவாதித்து, நல்ல தீர்ப்பளிக்குமாறுகோரி இருக்கலாம். இந்த முற்போக்கு மாணவர்களைக் காண துணை வேந்தர் மறுத்து விட்டாலும், இவர்கள் வாதத்தைக்கேட்டுஇவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்காது அவர் இருந்து விட்டாலும் அதன் பிறகு இந்தப் புரட்சி வீரர்கள் கைக்கொண்டிருக்க வேண்டிய ஒழுங்கான முறை எது? அண்ணாமலைப் பல்கலைக்கழக சிண்டிகேட்டுக்கு தங்கள் மனக்குறைகளை நேரில் விளக்கிக்கூறி இருக்க வேண்டும். அந்த இடத்திலும் இவர்களுக்குச் சாதமாகத் தீர்ப்புக் கிடைக்கவில்லையானால், கல்வி அமைச்சரைக்கண்டு, தங்களின் கவலைக்கான காரணங்களைக் கூறி, பரிகாரம் தேடி இருக்க வேண்டும். குறைபாடுகள் மட்டுமே நீங்கினால் போதும் என்று கொண்டிருக்கும் மாணவர்கள், இந்த ஒழுங்கான முறைகள் எல்லாவற்றையும் பின்பற்றி. லட்சிய வெற்றியை நாடி இருப்பார்கள்.

இப்பொழுது, இந்த மாணவர்கள், இருக்கும் நேர்மையான வழியை ஒதுக்கிவிட்டு, எடுத்த எடுப்பிலேயே, ஆர்ப்பாட்டம் செய்யக் கிளம்பினார்களோ, அதிலிருந்தே இவர்களுடைய கோரிக்கையில் கோளாறு இருக்கிறது என்பதும், கோரிக்கை அர்த்தமற்றது என்பதும் விளங்கவில்லையா? அதுவுமன்றி, எதையாவது காரணமாகக் காட்டி, ஆர்ப்பாட்டம் செய்து, துணைவேந்தருக்குக் கோபத்தை மூட்டி, அதன் விளைவாக அவர் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைச் சாக்காகக் காட்டி, பல்கலைக்கழகத்திலிருந்தே அவரை விரட்டியடித்துவிட வேண்டுமென்ற முடிவின் மீது தான், இந்த முற்போக்கு மாணவர்கள் முயன்றிருக்கிறார்கள் என்றும் திட்டவட்டமாகக் கூறுவதும் பொருத்தமற்றதாகாது.

கோரிக்கை இரண்டும் நியாயமற்றது என்பதை அந்த மாணவர்களே நன்குதெரிந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதில் துளியும் சந்தேகத்திற்கிடமில்லை என்பதை, அவர்கள் செய்த கிளர்ச்சியின் போக்கிலிருந்தே நாம் ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம். கிளர்ச்சியைத் துவக்கிய மாணவர்கள், மாணவிகள் விடுதியின் அருகில் முகாமிட்டுக் கொண்டு, பெண்குலத்தையே பழிக்கின்ற முறையில், பல்கலை மாணவர்களென்றே சொல்லிக் கொள்வதற்கும் வெட்கப்படுகின்ற நிலையில்,வரையறை இல்லாமல்வாயில் வந்தபடி யெல்லாம் வசை மொழிகளை வாரி வீசி இருக்கிறார்கள். சுவர் இடிப்புப் பகட்டுக் கிளர்ச்சிக்கு மாணவிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக, இந்த மாணவ கும்பல் கண்டு பிடித்துக் கையாண்ட புரட்சி கோஷங்கள் இவைகள். காலித்தனத்தைத் துணை வேந்தர் அறியவந்ததும், துணைவேந்தர்குறிப்பிட்ட மாணவிகள் விடுதிக்குத் தமது மோட்டாரில்சென்று, கலகக்கார மாணவர்களைக் கலைந்து போகும்படி வேண்டிக்கொண்டு இருக்கிறார். வேண்டுகோள் பயனளிக்கவில்லை, இந்தக் கும்பலின் வசைமாரியும் ஓயவில்லை. வேண்டுகோள் பயனளிக்காதது கண்டு, அந்த இடத்தை விட்டு, ஸ்தாபகர் தின விழாவிற்குத் தலைமையேற்க வந்துள்ள சென்னை மேயர் தங்கி இருக்கும் விருந்து மாளிகைக்குச் செல்ல துணைவேந்தர் முயன்று இருக்கிறார். அது சமயத்தில் அவருடைய மோட்டார்காரை நகர்ந்து செல்ல விடாமல் இந்த மாணவர்கள் தடுத்து நிறுத்திவிட்டிருக்கிறார்கள். வேறு வழி இல்லாததால், நடந்து செல்லத் துணைவேந்தர் முயன்றிருக்கிறார். அது சமயத்தில் அவர் செல்லும் பாதையில் படுத்துக்கொண்டு, அவர் செல்வதைத் தடுத்தனர் இத்தகைமையாளர்கள்! ஒரு மாணவன், அவர் கால் சட்டையைப் பிடித்து இழுத்தானாம். அந்தப் பரம சாது மீது செங்கல் ஒன்றையும் வீசினானாம் மாணவ உருவில் உலவிய, மாணவ உலகுக்கே மாசுண்டாக்கிவிட்ட ஒரு கயவன்.

எப்படியோ தப்பிக்கொண்டு, விருந்து மாளிகையை அடைந்துவிட்டார்,பொறுமைக்கு உறைவிடமான உத்தமத் துணைவேந்தர். அவர் மீது வசை மொழிகளை வீசிக்கொண்டே, விருந்து மாளிகையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர், இந்த விஷமிகள். பல்கலைக் கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டால், அது, தாம் சாகும்வரையில் 'அந்தப் பல்கலைக் கழகத்தில் படித்தா பட்டம் பெற்றீர்" என்று பார்க்கிறவர்கள் எல்லாம் கேலி பேசும் நிலையைத் தமக்குத் தந்துவிடுமே என்ற உயர்ந்த கருத்தை, விருந்து மாளிகை விளக்க முரைத்து நிற்பதைக் கண்ட பின்னரும் கூட, கலகக்கார மாணவர்களுக்கு நற்புத்தி பிறக்கவில்லை. விருந்து மாளிகையில் தங்கி இருந்த சென்னை மேயர், அமைதியாகக் கலைந்து செல்லும்படி வேண்டிக்கொண்டாராம். விழலுக்கிறைத்த நீராயிற்று அந்த வாய்மையும். இந்தக் காட்சியை வாசகர்கள் கற்பனை செய்து பார்க்க வேண்டும், தங்களை ஒவ்வொரு துணைவேந்தர்களாகத் தீர்மானித்துக்கொண்டு, நிறுவனத்தின் நற்பெயர் நெடிநாற்றம் அடிக்கும் நிலை பெறுகிறதே இந்த விஷமிகளின் விரும்பத்தகாத செயலால், எப்படி அமைப்புக்கு ஏற்படும் களங்கத்தைத் துடைப்பது, எவ்வள காலம் பிடிக்கும் மாசுதுடைக்கும் பணி, வேற்றி பெற, என்பன போன்ற மனம் உருக்கும் சிக்கலான பிரச்னைகள் எல்லாம் கூர் ஈட்டிகளாக உருவெடுத்துக் குத்தியிருக்காதா, துணை வேந்தரின் இருதயத்தை? கவுரவமிக்க ஒருவர் முன்னிலையில், மாணவர்களும் அகமும் முகமும் மலர்ந்து, மகிழ்ச்சி இன்பத்தில் திளைத்து, ஒருவரோடு ஒருவர் அன்போடு உரையாடி உற்சாகத்தோடுஇருக்கவேண்டிய ஒருபெரு நாளில், ஸ்தாபகர் தின விழாவில், கலகம் விளைவிக்கிறார்களே மாணவர்களில் ஒரு பிரிவினர் என்று எண்ணிடும் பொழுது துணைவேந்தர் ஒரு சேர ஆயிரந் தேள் கொட்டின நிலையைப் பெற்றிருக்க மாட்டாரா? அவர் உள்ளம் உடைச்சல் கண்டிருக்குமே. குருதி கொதிப்பேறி இருக்குமே, கண்கள் குட்டையாகி இருக்குமே, அவர் பார்வையில் மேயர்மட்டும் இல்லாது இருந்திருந்தால்.

மாணவர்கள் செய்த இவ்வளவு ஆர்ப்பாட்டத்திற்கும், அவர் ஆத்திரத்திற்கு அடிமையாகி விடவில்லை. அன்பு அவர் உள்ளத்தில் உரம் பெற்றது. பொறுமை அவரிடம் குடிபுகுந்தது. புகழ் அவரைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டது. போற்றுகிறோம் பொறுமைக் குன்றை. புகழுகிறோம் துணை வேந்தரை, அவருடைய அன்புக்காக. வாழ்த்துகிறோம் அவரை, அவருடைய பணி புரியும் ஆற்றலுக்காக.

குறித்த காலத்தில், விழாவிற்குச் செல்ல முடியாமல் மேயரை தடுத்துவிட்டனர், இந்த விபரீத புரியினர். துணைவேந்தரை, பன்னிரண்டு மணி நேரம், விருந்து மாளிகையிலேயே சிறைப்பிடித்து விட்டனர், மாணவர்கள் என்ற பெயருக்கே ஒரு துளியும் தகுதியற்றவர்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்து, விஷமிகளை, கலகத் துவக்கத்திலேயே, கொட்ட மடங்கச் செய்திருக்கலாம், துவக்கத்தில் போலீஸ் துணையை நாடவில்லையானாலும், தாம் சிறைப்பட்டப் பின்னராவது, போலீசின் உதவியைக் கோரி இருக்கலாம். வேறு, எவர் துணைவேந்தராக இருந்தாலும்பல்கலைக்கழகம் அன்றையத் தினம் குருதி தோய்ந்த களமாக மாறி இருக்கும். ஆனால், அந்தக் கருத்தற்ற செயலைச் செய்ய துணைவேந்தர் கருத்திலும் கொள்ளவில்லை. தம்மைச் சிறைப்பிடித்த மாணவர்களிடத்தில், அந்த நெருக்கடியான சட்டத்திலும், போலீசை ஏவி, பழிவாங்க வேண்டுமென்ற பண்புக்குத் துணைவேந்தர் பலியாகவில்லை.

இந்த மாணவர்களாடிய புரட்சி நாடகம் உச்ச நிலையடைகிறது இந்தக் கட்டத்தில் தான். இந்த மாணவர்கள் மனத்திலே மறைந்து கிடந்த வீஷம்-காலித்தனத்துக்கான உண்மையான காரணம்—வெளியில் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. அதாவது, **கோரிக்கைகளுக்கு இணங்கு; இல்லையேல் பதவியைவிட்டு விலகு"** என்று, கிளர்ச்சிக்கான மூலகாரணத்தைக் கக்கி விட்டார்கள்! இந்தத் மாணவர்கள்! கோரிக்கை வெற்றி பெறுவதுதான் கிளர்ச்சிக்கான மூலகாரணமாக இருக்குமானால், எவரும் திரும்பக் கோரிக்கைகளை மட்டும்தான் விடாப் பிடியாக வற்புறுத்திக்கொண்டு இருப்பார்களே யன்றி, சம்பந்தப்பட்டவர்களைத் துறவு கொள்ள வேண்டுமென்று கோரமாட்டார்கள். ஏனெனில், குறிப்பிட்ட விஷயத்தில், துணைவேந்தர் துறவுபூண்டு விடுவதால் மட்டும், இந்த மாணவர்களின் அநியாயமான இரு கோரிக்கைகளும் நிறைவேறிவிடும் என்று மதியிலியும் நம்பமாட்டான். இந்தத் துணைவேந்தர் விலகினால், வேறு ஒருவர் துணைவேந்தராக வருவாரே யன்றி, கலகஞ் செய்யும் மாணவர்களில் எவருக்கும் துணைவேந்தர் பதவி கிடைத்துவிடப் போவது கிடையாது. இப்போது இருக்கும் துணைவேந்தர் நீங்கினதும், அந்த இடத்திற்குப் புதிதாகவரும் ஒருவரிடமிருந்து, தங்கள் கோரிக்கைகளுக்கு சம்மதம் கிடைக்குமென்ற வாக்குறுதியை, இந்த மாணவர்கள் ஒன்றும் முன் கூட்டியே பெற்றிருக்கவில்லை என்பது வெளிப்படை. தங்கள்குறைகளைக்களைந்து கொள்ள, இந்த மாணவர்களில் எவரும் துணைவேந்தராக வர சந்தர்ப்பம் கிடையாது. புதிதாக வருகிறவரிடம், இவர்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவு கிடைக்குமென்று உறுதியும் கிடையாது. இந்தச் சூழ்நிலையில் கோரிக்கைகளின் வெற்றிக்குத்தான் விஷமம் செய்யலாமேயன்றி, நிர்வாகப் பணிபுரியும் துணைவேந்தரையே துறவு கொள்ளவேண்டுமென்று கோருவது கொஞ்சமும் பொருத்தமுடையதாகாது. ஆனால். பொருத்தமானதோ இல்லையோ, துணை வேந்தர் தலையைக் கேட்கிறார்கள், தங்கள் கோரிக்கைகளுக்கு ஈடாக, மாணவர்கள் என்ற பெயர் தாங்குவதற்கானத் தகுதியை இழந்துவிட்டவர்கள்! எனவே சுவரைத் தரைமட்டமாக்குவதும், கதவைப் பிடுங்கி எறிவதும்தான் இவர்களுக்குள்ள உண்மையான மனக்குறை என்பது நூற்றுக்கு நூறு பொருத்தமற்றதாகும் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. இந்த இரு கோரிக்கைகளையும் வெளியில் சொல்லிக் கொள்வதற்கும், பெருவாரியான மாணவர்களைத் தங்கள் அக்கிரமத்தில் பங்குகொள்ளச் செய்வதற்கும், வெறும் புகலாக-பிரசார தந்திரமாகக் கொண்டார்களேயன்றி அந்தக் கோரிக்கைகள் வெற்றி பெற்றாக வேண்டும், என்ற விருப்பத்தினால் அல்ல. இவர்கள் கிளப்பிய இரு கோரிக்கைகளும் வெறும் புகல் என்று மெய்யாகி விட்டப் பிறகு, பின்னர், இவர்கள் கிளர்ச்சிக்கான உண்மையான காரணம் எதுவாகத்தான் இருக்க முடியும் என்று நாம் யோசித்தாகவேண்டும். இந்த மாணவர்கள் மனத்திலே மறைந்துகிடக்கும் நஞ்சு எதுவென்பதைக் கண்டறிய. நாம் ஒன்றும் அதிகமாக முயற்சிக்கத் தேவை இல்லை. அவர்களை அறிந்தோ அறியாமலோ, அவர்கள் மனத்தில் மறைந்துகிடக்கும் 'குறைபாடு' அம்பலமாகிவிட்டது. அதாவது, துணைவேந்தர் தோழர் மணவாளராமானுஜம்அவர்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து எப்படியாவது தொலைத்தாக வேண்டும் என்பது தான். அந்த மாணவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் வஞ்சகக் கோட்பாடு. என்ன காரணம் இதற்கு? குறிப்பிட்ட இச்சிறுகும்பலுக்கு மட்டும், துணைவேந்தர் இழைத்துள்ள தீங்கென்ன? தீங்கிழைத்தவர்கள் மட்டுந்தானா தண்டிக்கப்படுகிறார்கள் இந்த உலகத்தில்? நிரபராதிகளுந்தானே தண்டனை பெறுகிறார்கள்! கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களின் பட்டியலைக் கொஞ்சம் நுனுகி ஆராய்ந்து பார்த்தால், ஒரு குற்றமும் செய்யாதவர்—மனத்தினாலும் குற்றங்களைத் தீண்டாதவர் — அன்புருவினர் — அனைத்து மாணவர்களையும் ஒன்றெனறெண்ணும் உயர்ந்த பண்பினர்—ஆகிய தோழர் மணவாளராமானுஜம், அநீதியாகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பதற்கான, மறுக்கமுடியாத உண்மையான காரணத்தை அனைவராலும் புரிந்துகொள்ள முடியும். பலகாலமாக அனுபவத்தில் கண்டுவரும் உண்மைக்கு, அதிக விளக்கம் கூறவேண்டிய கட்டாயம் இல்லை அல்லவா?

## உணவுப் பிரச்னை தீர மீனை ஏராளமாகச் சாப்பிடுங்கள்!

உணவுப் பிரச்சினை நெருக்கடி தீர்ந்து மக்கள் அனைவரும் போதிய உணவு பெறுபவர்களாகத் திருப்தியடைய, மீன்பிடிப்புத் தொழிலை வளர்க்கவேண்டும் என்று இந்திய உணவு உத்பத்தியமைச்சர் ஜெயராமதாஸ் எர்ணாகுளத்தில் பேசினார். மீன் பிடிக்கும் தொழிலில் இன்றுவரை சுமார் 60,000 பேர் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஆனால் இவர்களுட் பலர் தக்கவாறு வாழ்க்கை நடத்தக்கூடிய அளவு இத்தொழிலில் பலன் அடைய முடியவில்லை. எனவே இந்த அமைச்சர்கள் வளர்ச்சி செய்யுமாறு வாயாரப் பேசிவிடுவதாலோ, 1½ லட்சம் சதுர மைல் பரப்புக் கடலை விருத்தி செய்யுமாறு கூறுவதால் மட்டுமோ பயன் விளைந்துவிடாது. பேனட்டினரும் ஜப்பானியரும் இத்துறையில் பயன்படுத்தும் வழிகளை, நம் நாட்டில் அரசாங்கமே பயன்படுத்தி, இத்துறையில் நவீன முறைகளை ஈடுபடுத்த உடனடியாக முன் வாராதவரையில் பேச்சினால் எப்பயனும் விளையாது.

## தோழர் டிட்டோவுக்கு ஆதரவு!

யூகோ தலைவர் தோழர் டிட்டோவுக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகிக்கொண்டிருக்கிறது. சுற்றியுள்ள நாடுகள் சில எந்த சமயத்திலும் டிட்டோவுடன் சேர்ந்துவிடக் கூடுமென்று தெரிகிறது. இங்ஙனம் டிட்டோவுக்கு ஆதரவு வளர்ந்து வருவதுகண்டு, தோழர் டிட்டோவை வம்புக்கிழுக்க காமின்பாரம் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தோழர் டிட்டோ கூடுமானவரையில் கைகலப்புக்கு இடங்கொடுக்க வேண்டாமென்று தனது தோழர்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இங்ஙனம் டிட்டோவுக்குப் பெருகிவரும் ஆதரவையும், டிட்டோவின் சமாதானமனப்பான்மையும் கண்டு ரஷியா கலக்கமடைந்திருக்கிறதாம்.

# முன்னாள் செயலாளரின் முகாரி

[1 பக்கத் தொடர்ச்சி]

தவறான வழியில் பணம் திரட்டும் பணி-காங்கிரஸ் ஊழியர்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருக்கிறதென்பதும், பரிகாரிகச் பட்டாபி எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றதாகவும், அனைத்து இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையாவே, எடுத்துக்காட்டி வேதனை வெண்பா பாடுகின்ற பொழுது, அதே குறைபாடுகளை நாம் எடுத்துக்காட்டும் பொழுது மட்டும் கனல்கக்கும் காமராஜர்களைக் குறித்துப் பொதுமக்கள் என்ன எண்ணுவார்கள்?

காங்கிரஸ் குருநாதர்' தம் சீடர்களின் ஒழுக்கக்கேட்டை, பணம் திரட்டும் படலத்தை, ஒன்று திரட்டி, ஒரு நூல் எழுதி, நல்ல முறையில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். காங்கிரஸ் வரலாற்று நூலின் ஆசிரியர் அல்லவா டாக்டர்? உயர்ந்த ஆங்கிலம், எழுதும் திறம் படைத்தவராக இருக்கும் அவர் எழுதினால், காங்கிரஸ்காரர்களின் கூடா ஒழுக்க வரலாறு, உயர்ந்ததோர் ஆங்கில இலக்கியமாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை! ஆங்கில இலக்கியத்திற்கு நற்தொண்டு செய்த சிறப்பும் பட்டாபிக்கு ஏற்படும்!

டாக்டர் பட்டாபியை வகுப்புவாதி என்றோ, தேசத்துரோகி என்றோ, துணிந்து கூற ஒருவரும் முன் வரமாட்டார்கள். டாக்டர் பட்டாபி குருநாதர் என்றால், காங்கிரஸ ஊழியர்கள் சீடர்கள் என்பது சொல்லாமலே பெறப்படும் உண்மையாகும். குருவே, தம் சீடர்களின் செயல்கண்டு வருந்துகிறார். வெளியில் சொல்லி வேதனைக்கு ஆறுதல் தேடுகிறார் என்றால், நம்போன்ற எதிர் கட்சியினர், இதனை எப்படி வெளியில் சொல்லாமல் இருப்பர்? டாக்டர் பட்டாபி கூறுவதையே நாம் கூறினால், சர்க்காரின் சட்டம் சீறுகிறது சிறைச்சாலை அழைக்கிறது. எழுதுகோல் பிடுங்கிக்கொள்ளப்படுகிறது. 'கூடாதே—பேசாதே—எழுதாதே—நடமாடாதே' என்ற உத்தரவு துறத்துகிறது!

பட்டாபியின் பேச்சுக்குப் பிறகு எடுத்தாளப்பட்ட வார்த்தைகளைக் கூறினது கிழக்குப்பஞ்சாப் சட்டசபையின் முன்னாள் முதல் மந்திரியின் முதன்மை செயலாளராகும். கொஞ்சம் காரசாரமாக இருக்கிறது விவகாரம். பதவியை விட்டு நீக்கினதினால் பிறந்த வேகமாக இருக்கலாம் இது. உண்மையை எடுத்துக் கூறினதற்கு எது காரணமாக இருந்தபோதிலும், விஷயம் விளக்கமாக இருக்கிறது என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

அடுத்தபடியாக வரையப்பட்டுள்ள வாசகம், கி. பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருடையதாகும். சட்டசபை உறுப்பினர்களின் நன்மைக்காகவும், அவர்களுடை உற்றார் உறவினருக்காகவுந்தான், கி. பஞ்சாபில காங்கிரஸ ஆட்சி நடைபெறுகிறதாகக் குறை படுகிறார். அருமையான ஆட்சி முறை! இந்த லட்சணத்தில், காங்கிரஸ் ஆளவந்தார்கள், இதுவரை எவ்வளவோ சாதித்து விட்டதாகவும், மற்றவர்களால் இரண்டு நாளைக்குக்கூட ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த முடியாது என்றும், வீராப்புப் பேசி வருகிறது. வேடிக்கையாகும்!

# பெற்றவள் பிச்சை எடுக்கிறாள்

## பிள்ளையோ வள்ளல்தான்

சென்னை மாநிலத்தைச் சேர்ந்த மக்களுட் பலர் உணவு, உறையுள் கிடைக்காமல் தத்தம் ஊர்களை விட்டுப் புறப்பட்டுப் பிற ஜில்லாக்களில் அகதிகளைப் போன்று தயங்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

பஞ்சத்தின் கொடுமை தாங்க முடியாமல் இராமநாதபுரம் திருநெல்வேலிஜில்லாக்களிருந்து எவ்வளவோ மக்கள் வெளியேறி தஞ்சை, மதுரை ஜில்லாக்களுக்குச் சென்று கூலி வேலைகள் செய்தும், வேலை கிடைக்காத சமயத்துப் பட்டினி கிடந்தும் அகதிகளாக அலைந்து கொண்டிருப்பதை யாவரும் அறிவர்.

தமிழ்நாட்டிலிருந்து வயிற்றுக்கு உணவில்லை யென்ற காரணத்தால், பர்மாவுக்கும், இலங்கைக்கும், மலாய் நாட்டுக்கும் என்றுள்ள மக்களுட் பலர் அங்கும் வாழ வசதியில்லாமல் நம் நாட்டுக்குத் திரும்பிவந்து அகதிகளாய் அற்லற்படுவது அனைவருக்கும் தெரியும்.

மறமேறும் தொழிலாளர் பலர் மது விலக்கின் காரணமாய்த் தொழிலற்று பிழைக்க வேறு வழியின்றித் தெருத் தெருவாய் வேலை தேடியலைவதும், பஞ்சம் தாளமுடியாமல் பட்டினியால் சிறுகச் சிறுகச் சாவதும் அன்றாடம் காணும் காட்சியாக அமைந்திருக்கிறது. இவ்விரு திறத்தாரும் சென்னை நகரத் தெருக்களில், பர்மா அகதிகள், மறமேறும் தொழில் புரிந்த அகதிகள் என்று எழுதி கொடிகளைக் கட்டித் தூக்கிக் கொண்டு தெருத் தெருவாச் சுற்றிப் பிச்சை எடுப்பதைச் சென்னை மக்கள் அன்றாடம் பார்க்கின்றனர்.

சென்னை நகரத் தெருக்களில் வீடு வாசலற்ற மக்கள் சாக்கடை ஓரங்களில் அகதிகளைப் போன்று வாழ்க்கை நடத்துவது அன்றாடம் காணும் காட்சியாயிருக்கிறது.

தமிழ் நாட்டில் பிழைப்புக் கிடைக்காமல், மைசூர் போன்ற சமஸ்தானப் பகுதிகளுக்குச் சென்று, திறந்த வெளியிடங்களில் மந்தை மந்தையாக வாழும் தமிழர்களை அங்குள்ள மக்கள் இழித்துப் பரிகசித்து அல்லல்களுக் குட்படுத்துவதும் அவற்றையும் சகித்துக்கொண்டு அகதிகளாய் வாழ்வதுமான காட்சிகளைச் சமஸ்தானப பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் காணலாம்.

பொதுவாக நம்நாட்டு மக்களுட் பலர் வயிற்றுப் பிழைப்புக்காக அகதிகளாக அலைறப்பட்டுத் திரிந்துகொண்டிருப்பதை நாட்டை ஆளவந்தவர்கள் நன்கு அறிந்திருந்தும், அவர்களுக்கு உதவி செய்யவோ, அவர்களுடைய நிலைமையை உயர்த்தவோ எந்தவித முயற்சியையும் செய்ய முன்வரவில்லை.

ஆனால், வடநாட்டிலிருந்து சென்னைக்கு வந்துள்ள 4000 அகதிகளை இம்மாகாணக் குடிகளாயமைப்பதற்குச் சென்னை அரசாங்கம் 10 லட்சம் ரூபாய் செலவிடத் திட்டம் வகுத்திருக்கிறது. இப்போதே நம் மாநிலத்தில் 800 அகதிக் குடும்பங்கள் குடியேறிவிட்டன. மீதி அகதிகளையும் குடியேற்றும் வேலை விரைவில் நடத்தப்படும்.

இந்தவடநாட்டு அகதிகளுக்கு துவக்கத்தில் ஒருமாத ரேஷன் பணம் தரப்படுமாம். பிறகு வாணிகம் செய்வதற்காக வென்று, இவர்களுக்கு ரூ.250-லிருந்து ரூ. 3000 வரை கடன் கொடுக்கப்படுமாம். இது சென்னை அரசாங்கத்தின் வேலைதிட்டம்.

ஆனால், அகதிகள் அனைவரும் இந்நாட்டில் பரம ஏழைகளாக, சோற்றுக்கில்லாதவர்களாக இல்லை. பலர் இங்குவந்து 20 ரூபாய் வாடகை என மதிக்கத் தகுந்த இடங்களுக்கு 50ரூபாய் என வாடகைத்தர துணிந்தனர். சென்னை மாநிலத்தில் எப்போதுமில்லாத 'சலாமி' முறையை—(அதாவது, வீடுபிடிக்க வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு இனாமாகப் பணம் தருவது)ப்புகுத்தியவர்களும் இந்த வெளிநாட்டவர்களே. பலர் இங்குவந்து மாடமாளிகைகளையும் வீற்றிருப்பதையும் காணலாம், அதுமட்டு வடநாட்டிருந்து இங்கு வந்து வர்த்தகம் செய்யும் பேர்வழிகள் பலர் கோடீசுவர்களாகிவிட்டனர். பலர் வட்டித் தொழிலில் ஈடுபட்டுப் பெருவாரியான ஏழைத் தமிழர் பணத்தைச் சுரண்டி வடநாட்டுச்சனுப்பி வைக்கின்றனர். வடநாட்டு அகதிகளை, இந்தப்பேர்வழிகளிடம் ஒப்படைத்திருக்கலாம் சென்னை அரசாங்கம்.

ஆனால், அப்படியெல்லாம் செயயாமல், நம் நாட்டு ஏழை அகதிகளையும் அசட்டைசெய்து வடநாட்டு அகதிகளுக்கென 10 லட்சம் ரூபாய் செலவிட முன்வருவதென்றால், இந்தச் செயலை அறிவுள்ள மனம் நியாயம் என ஏற்றுக்கொள்ளுமா?

### திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

கோவை, அக். 28—

இன்று கோவை திராவிடர் முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் நகரின் கல்லூரி, பள்ளிகளின்மாணவர்கள் கூடி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைத்தனர். தோழர் அப்பாதுரை தலைமை வகிக்க மாணவர் கழகத்தின் அவசியத்தைப் பற்றி பலர் சொற்பொழி வாற்றிய பிறகு பதினைந்து பேர் அடங்கிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின், தோழர் மா. சென்னியப்பன் செயலாளராகவும், ஜெயபால் துணைச் செயலாளராகவும், நாகமணி விளம்பர உறுப்பினராகவும், வ. முருகேசன் நிதிக்காப்பாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்ட அமைப்பாளர் தோழர் பாலசுந்தரம் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

# ஆசிரியருக்கு முடங்கல்

### அதிகாரிகளின் ஆணவப் போக்கு அழியுமா?

ஐயா,

கடந்த 27-6-49 லிருந்து இந்த ஊரில் ஆற்காடு பஸ் நிலயத்தி (Arcot Bus Stand) ற்கு அருகாமையிலேயே குறிப்பிட்ட 3 இடங்களை போலீஸார் பஸ் நிற்குமிடங் (Bus Stoping Place) களாக ஏற்படுத்தி ஆற்காடு வழியாகச் செல்லும் நேர் வண்டிகளை அவ்விடங்களிலேயே நிறுத்தி பஸ் நிலயத்திற்குள் அனுமதிக்காமல் இருக்கின்றனர். எந்த ஊரிலுமில்லாத இந்நூதன முறையினால் பொது மக்களுக்கும் பஸ் பிரயாணிகளுக்கும் பல இன்னல்களும் அசௌகர்யங்களும் இருப்பதால் இம்முறையை நீக்கவேணுமாய் கோரி 6 7 49 அன்றைய தினம் ஆற்காடு பொது மக்களால் மகசர் ஒன்று தயாரிக்கப்பட்டு தக்க அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆயினும் நாளது வரையில் அதிகாரிகள் அந்த மகசரை கவனித்ததாகவே தெரியவில்லை. மற்றும் இது குறித்து "இந்தியன் எக்ஸ்பிரஸ்" "இந்து" "மாலை மணி" ஆகிய தினசரி செய்தித்தாள்களிலும என்னால் அனுப்பப்பட்ட கடிதங்கள் முறையே 15-7-49 19-7-49 20 9 49 ஆகிய தேதிகளில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆக இவ்வளவும் நடைபெற்றிருந்தும அதிகாரிகள் இதைப் பற்றி கடுகளவும் சிந்தித்ததாகக் காணேம்.

அதிகாரிகளின் இந்த ஆணவப் போக்கை நோக்குங்கால் அவர்கள் பொது மக்களின் நலத்திற்காக ஊழியம செய்யவேண்டியவர்கள் என்பதை மறந்து தனிப்பட்ட முதலாளிகளுக்கே தங்கள் அதிகாரத்தை துர்விநியோகம் செய்கின்றனர் என்றே கருதவேண்டியுள்ளது.

இனியேனும் அதிகாரிகள் கடைக்கண் பார்வை செலுத்தி பொது மக்களுடைய இன்னல்களைத் தீர்க்க உடனடியான நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,

29-10 49 ஆற்காடு } ஏ. டி. பாலசுந்தரம்

* * *

### சென்னிமலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் நெ. K 885

ஐயா,

ஷை சங்கத்தின் மெம்பர்கள் சுமார் 30 முப்பது பேர்கள் கையெழுது போட்டு மகாசபையை கூட்டுங்கள். என்று 26—9—49-ல் சங்கம் பிரசிடெண்ட் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்தோம். அதற்கு நாளது வரையில் கவனிக்கவே இல்லை. மேலும் சென்னிமலையில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் என்று இருக்கிறதே யொழிய தறிகாரன் ஒருவருமே டைரெக்டர் இல்லை. ஆகையால் சங்கத்தின் நிர்வாகச செலவு அதிகரித்துக்கொண்டு போகிறது, ஷை சங்கத்தில் செய்து வரும ஒரு தறிகாரன் மாத வரும்படி 11-4 ரூபாய் பதினொன்றும அணா நாலும் தான் வருமானம் தறிகாரனுக்கு. ஷை சங்கம் மேனேஜருக்கோ மாதம் சம்பளம ரூ-152 வீட்டு வாடகை லேட்டு செலவு ரூ. 46 வீட்டுவேலை செய்யும் கூலிக்கு ரூ. 10 ஆக இருநூற்றி எட்டு ரூபாயும் ஷை சங்கத்தில் இருந்துதான் கொடுக்கிறார்கள். மேலும சங்கத்தில் மொத்தம் மாதசம்பளம் ரூ. 468 நானூற்றி அறுபத்தி எட்டு போக்குவரத்து 350 மொத்தம் ரூபாய் 500 க்கு மேல் ஆகிறது ஷை சங்கத்தில 150 தறிசெய்யப்பட்டு வருகிறது. அந்த ஒவ்வொரு தறிகாரனும் 11 ரூபாய் கூலியில் சங்கம நிர்வாக செலவுக்கு 4. ரூபாய் மாதம் கொடுக்கிறான் பாக்கி 7 ரூபாய்தான் ஒரு தறிகாரன் மாத வரும்படி. இந்த ஏழு ரூபாய் வரும்படி வந்தால் எப்படி அவன் ஜீவனம் நடக்கும் என்றெல்லாம் ஷை சங்கம் பிரசிடெண்ட் அவர்களுக்கு எழுதியும் நேரில் சொல்லியும கேளாமல் கண்மூடித்தனமாய் இருக்கிறார் ஷை சங்கத்தின் சட்டபபடி 15 மெம்பர்கள் கையெழுத்துபோட்டுமகாசபையை கூட்டுங்கள் என்று விண்ணப்பம் கொடுத்தால் மகாசபை கூட்ட வேண்டும் என்ற சட்டம் இருக்கிறதாம். சட்டம் அப்படி இருகக பிரசிடெண்ட் கவனிக்காமல் இருப்பதின் மர்மம் என்னவென்று தெரியவில்லை. ஷை சங்கம் பிரசிடெண்ட் அவர்கள் கூட்டுறவு முன்னேறிவரவேண்டும் என்று சர்க்கார் சொல்லுகிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் அதற்கு நேர் விரோதமாக நடக்கிறது. பிரசிடெண்ட் அவர்கள் நிர்வாகம் சென்னிமலையில் ஷை சங்கம் பிரசிடெண்ட் கவனிக்கவில்லை என்று ஈரோடு கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் மாகாண கூட்டுறவு ரிஜிஸ்திரார் மாகாண கூட்டுறவு மந்திரி இவர்களுக்கு 7 10 49-ல் தெரியப்படுத்தியும் அவர்களும் கவனித்ததாகவே இல்லை ஆகையால் இதற்கு விமோசனம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு

ச. ச. சென்னியப்பன்

சென்னிமலை 29—10—49

# ரூசோவுக்கு மரியாதை

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரஞ்சுப் புரட்சி வீரரும், தத்துவ ஞானியுமான தோழர் ரூசோ அவர்களைக் கவுரவிகக பாரிஸ் மக்கள் முன் வந்துள்ளனர். பாரிசுக்கு அருகிலுள்ள மவுண்ட் மாரெனஸி என்னுமிடத்தில் தோழர் ரூசோ அவர்கள் வசித்து வந்த வீட்டை தேசிய மியூசியமாக மாற்றியமைக்கத்திட்டமிட்டிருக்கின்றனர். வஸ்டனில் ஸ்டாபோட்-ஆன்-ஆவான் என்னும் ஷேக்ஸ்பியர் வாழ்ந்த இடம் அண்மையில் இம்மாதிரியே மாற்றியமைக்கப்பட்டச் செய்தி வெளிவந்துள்ளதை வாசகர்கள் அறிவர்.

தோழர் ரூசோவை கவுரவிக்க முன் வந்துள்ள ஜெனிவா மக்கள் ஒரு மில்லியன் பிராங்குகள் நன்கொடையாகக் கொடுத்துள்ளனர். தோழர். ரூசோ இந்த வீட்டில் வசித்து வந்தபோது தான் "ஹன்பெஷனஸ்" என்னும் சிறந்த நூலை எழுதினார்.

---


# திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

## 3-11-49

திருவொற்றியூர் :— சி. என். அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன், காஞ்சி. மணிமொழியார்.

புதுக்கோட்டை :— சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி.

## 4-11-49

புதுப்பட்டணம் :— என் வி. நடராசன், என். எஸ். இளங்கோ

# அவர்களுக் குள்ளேயே போட்டி!

—(0)—

## போட்டியில் பொதிந்துள்ள இரகசியம் என்ன?

## பொதுநலம் நாடும் புண்ணியர்கள் பதில் சொல்லட்டும்!

''எங்களுக்கு நாட்டு மக்களின் நலத்தில்தான் அக்கரை; தேச சேவையே எங்கள் குறிக்கோள்; நாங்கள் மற்றக கட்சிக்காரர்களைப்போல்பதவி வேட்டை ஆடுபவர்களல்ல; அண்ணல் காந்தியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் தியாகிகள் நாங்கள் என்று ஓயாது பேசுகின்றனர் நமது காங்கிரஸ் தோழர்கள்.

''இதோ பார் உன் ஊழலை' என்று மாற்றுக் கட்சித் தோழர்களாகிய நாங்கள் சுட்டிக் காட்டும்போது நம்மை வகுப்பு வாதிகள் என்கின்றனர். அத்தகைய அன்பர்களின் கூடாரத்துக்குள்ளேயே நடைபெறும் கூத்தைப் பொது மக்களுக்குச் சுட்டிக்காட்ட ஒரு நிகழ்ச்சியை கீழே தருகிறோம்.

அண்மையில் கோதாவரி ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடைபெற்றது. அதில் காங்கிரசின் சார்பாக, உத்தியோக முறையில் தேர்தலுக்கு நிறுத்தப் பட்டவர் தோழர் சூரியநாராயணன் என்பவர். இவருக்குப் போட்டியாகத் தோழர் சீதாராமன் என்பவர் நிறுத்தப்பட்டார். உத்தியோக பூர்வமாக நிறுத்தப்பட்ட காங்கிரஸ் தோழரை எதிர்த்து நின்றதோழர் யார் தெரியுமா? காங்கிரசார் சொல்லுவது போல் காங்கிரசின் எதிரியல்ல அவரும் ஒரு காங்கிரஸ்காரர்! ஆனாலும் போட்டியிட்டார். போட்டியில் வெற்றியும் பெற்றார். உத்தியோகப் பூர்வமாக நிறுத்தப்பட்ட, அதாவது முத்திரையிடப்பட்ட அசல் காங்கிரஸ்காரர் தோல்வியுற்றார்!

இதில் யாருக்கு வெற்றி யாருக்குத் தோல்வி என்பது பற்றிய பிரசனையில் நாம் ஈடுபட விரும்பவில்லை. இந்த இரண்டு பேரில் யார் வெற்றி பெற்றாலும் நமக்கு ஒன்றுதான். பின்னை இதனை ஏன் வலியுறுத்திச் சுட்டிக் காட்டுகின்றோமெனில், ''நாங்கள் தான் புனித மக்கள்,'' என்று நாள் தோறும் பேசி வருகின்றனரே காங்கிரசார். அப்படிப் பட்டவர்களிடையே இப்படிப்பட்ட போட்டி தோன்றக் காரணம் என்ன என்பதை மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

மாற்றுக் கட்சிக்காரர்களைக் குறைகூறித்திரியும் காமராஜர் இதற்கு என்னபதில் சொல்லுவார்? மக்கள் நலமே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் இந்த மகான்கள் இப்படி ஒரு ஜில்லாபோர்டு தலைவர் பதவிக்காகப் போட்டியிடுவதில் பொதிந்து கிடக்கும் இரகசியம் என்ன? மாற்றுக் கட்சித் தோழர்கள்தான் பதவிக்குப் பல்லிளித்து நிற்கின்றனரென்றால், இந்தப் புண்ணியர்கள் இப்படிப் பல்லிளித்து நிற்பது ஏன்? காங்கிரசின் பிரதாபத்தைத் திக்கெட்டும் பரவச் செய்ய பவனிவரும் காமராஜர் இதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறார்?

## மதுவிலக்குள்ள இடத்தில் மது

பொன்னேரி கடைத் தெருவில் இருவர் மது வருந்தியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். இந்த இருவரும் குடித்து போதையிலிருந்த காரணத்திற்காகக் கண்டு பிடிக்கப்பட்டனர். ஆனால், இவர்களுக்கு மதுவை அளித்தவர்கள் மது எப்படி இவர்களுக்குக் கிடைத்தது. மதுவிலக்குப் பிரதேசத்தில் மது எப்படி முளைத்தது என்பவை கண்டு பிடிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. அவர்கள் தண்டனைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

## சர்க்கரைப் பஞ்சத்திற்கு காரணம் என்ன?

ஒழுங்கான முறையில் கிடைத்துக்கொண்டிருந்த சர்க்கரை திடீரென்று மறைபொருளாகிவிட்டது. இப்படியானதற்குக் கூறப்பட்ட நொண்டிக் காரணம் ரயில் வாகன்கள் கிடைக்கவில்லை என்பது. ஆனால், எம். எஸ். எம். ரயில்வே எவ்வளவு வாகன்கள் வேண்டுமானாலும் சர்க்கரை ஏற்றி வருவதற்கெனத் தரத் தயார் என்று அறிவித்துவிட்டது. இனி என்ன காரணம் தேடப்போகின்றனரோ தெரியவில்லை.

சர்க்கரை மறைவுக்குக் காரணம் முதலாளிஇனம், வணிகஇனம் கள்ளமார்க்கெட் ஆசையால் செய்யும் அட்டூழியம் ஒன்றைத்தவிர வேறு என்ன இருக்கிறது. மத்திய அரசாங்கமும்; மாகாண அரசாங்கங்களும் முதலாளிகளுக்கு அஞ்சாமல் கடும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்றால், சர்க்கரை மட்டுமல்ல, இன்னும் எவ்வளவோ பொருள்கள் தாராளமாகப் பொது மக்களுக்குக் கிடைக்குமே. அரசாங்கத்திற்கு அந்தத் துணிவு எங்கிருக்கிறது?

# முன்னுக்குப்பின் முரண்பட்ட ஆட்சி முறை!

## வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறைக்கு ஓரிடத்தில் வரவேற்பு;

—(0)—

## பிறிதோரிடத்தில் வழியனுப்பு உபசாரம்!

முன்னுக்குப் பின் முரண்பாடுடைய பணிகளை மேற்கொள்ளுவதில் காங்கிரசாருக்கு நிகர் வேறுயாருமேயில்லை. சொல்லொன்று செயல் ஒன்று என்ற பண்பாடு காங்கிரசாரின் சொந்த சரக்கு. இதற்கு உதாரணம் தேடிக்கொண்டு அலையவேண்டிய அவசியமேயில்லை. பதவிக்கு வருவதற்கு முன் அவர்கள் பேசி வந்த பேச்சுகளையும், பதவிக்கு வந்த பின் அவர்கள் செய்து வரும் ஒவ்வொரு காரியத்தையும் ஊன்றி கவனித்தால் இந்த உண்மை வெள்ளிடை மலையென விளங்கும்.

வகுப்பு வாதம் ஒழிய வேண்டும், என்று மூச்சுவிடாமல் பேசுகின்றனர் காங்கிரசார். அப்படிப் பேசுகின்ற வேகத்தில் வகுப்புகளுக்குநீதிவழங்கவேண்டிய முறை, அதன் அவசியம் ஆகியவற்றைக் கூட மறந்து விடுகின்றனர். அன்றுநீதிக்கட்சியார் வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் செய்த போது இதனால் வகுப்புத் துவேஷம் வளரும் என்று கூச்சல் போட்டனர்.

அன்று முதல் இன்று வரை அந்த சட்டத்தை ஒழித்துவிட ஓயாது பாடுபடுகின்றனர் ஆனால், அதே நேரத்தில் அவர்களே வகுப்புவாரிபிரதிநிதித்துவத்துக்கு தம்மையும்அறியாமல் ஆதரவுதேடுகின்றனர். இதுகாங்கிரஸ் ஆட்சியில் நடைபெறும் சம்பவம். அங்கே வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் கடைப்பிடிக்கப்படுகிறது. உத்தியோகங்களில் வகுப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி ஸ்தானங்கள் வழங்க ஏற்பாடு நடைபெறுகிறது. அதே நேரத்தில் மேற்கு வங்க மந்திரி சபை சப்கமிட்டி வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை ஒழித்துவிட வேண்டுமென்று சிபார்சு செய்கிறது.

மேற்கு வங்கம், கிழக்குப் பஞ்சாப் ஆகிய இவ்விரு இடங்களும் இந்திய யூனியன் ஆட்சிக்குட்பட்டவை. அதாவது, காங்கிரசார் ஆட்சி நடத்தும் மாகாணங்கள், இங்ஙனம் ஒரே ஆட்சியின் கீழுள்ள இரண்டு இடங்களில் இரண்டுவித முறை கையாளப்படுகிறது. ஓரிடத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கு வரவேற்பு; மற்றோர் இடத்தில் வழியனுப்பு உபசாரம்! இப்படிப்பட்ட இரட்டை வாழ்க்கை வாழ்கின்றனர் காங்கிரசார். விசித்திர ஆட்சி நடத்துகிறது அவர்களுடைய அரசாங்கம்.

இங்ஙனம் முன்னுக்குப் பின் முரண்பட்டு காரியங்களைச் செய்து வரும் இவர்கள் பிறரைக் குறை கூறுவதில் ஏதேனும் பொருளுண்டா என்பதை பொதுமக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். பாவம்! அவர்களுக்கு எதை எப்படிச் செய்வது என்பது இன்னும் புரியவில்லை. ஐக்கிய இந்தியாவை அமைக்க விரும்பும் இந்த ஆட்சியாளரிடம் கருத்தளவில் இன்னும் ஐக்கியம் ஏற்பட்டபாடில்லை. இப்படிப்பட்ட ஆட்சி முறையை விசித்திர ஆட்சி முறை என்று சொல்லாமல் வேறென்ன சொல்லுவது?

# படக்கலையைப் பயனுள்ள கலையாக்குங்கள்

## பட முதலாளிகட்கு பவநகர் உபதேசம்

''மக்களுக்கு நல்லறிவுகட்டி கல்வி கற்பிக்க சினிமா மகத்தான சாதனமாக விளங்கலாம், ஆனால் அதைத் தவறான வழிகளில் பயன்படுத்தினால் பெரும் கெடுதியையும் உண்டுபண்ணும்''

என்று அண்மையில் சினிமா கலை நிபுணர்கள் ‘முதலாவது மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசியபோது சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா பேசியிருக்கிறார். படக்கலை பக்குவப்பட பவநகர் மகாராஜா காட்டும் இந்தப் பாதை நல்ல பாதைதான். மக்களுக்குக் கல்வியறிவு புகட்டப் படக்கலை ஒரு சாதனமாகப் பயன்பட வேண்டும் என்பதுமட்டுமல்ல. அவர்களுடைய பகுத்தறிவை வளர்க்கும் முறையிலும் படக்கலை பயன்படவேண்டும் என்று நாம் கருதுகிறோம். பவநகர் மகாராஜா அவர்கள் கூறுவதுபோல் சினிமாக்கள் நாட்டு மக்களுக்கு நல்லறிவு புகட்டவேண்டும் என்பது ஒருபுறமிருப்பினும், கொஞ்சநஞ்சம் இருக்கின்ற அறிவையும் பாழ்படுத்தாமல் இருந்தால் போதும். அதுவே பட முதலாளிகள் படவுலகிற்குச் செய்யும் அருந்தொண்டாகும். முதலில் இந்த முதலாளிமார்கள் புராணக்கதைகளைப் படமெடுக்கும் பணிக்கு முற்றுப் புள்ளி வைக்கட்டும்.

''நல்ல கருத்துடைய படங்களை எடுக்கவேண்டும்'' என்கிறார் பவநகர். இந்த நல்ல கருத்துகள் புராணப்படங்களில் காண முடியாது. ஏன், கருத்தையே காணமுடியாது. இந்நிலையில் இனியும் அவை நமக்குத் தேவையா என்று கேட்கிறோம்.

அப்படியாயின் வேறு எவற்றைத்தான் படமாக எடுப்பது என்று கேட்கப்படலாம். அதற்கும் பவநகர் பேச்சிலிருந்தே பதில் தருகிறோம். அவர் சொல்லுகிறார். தற்கால எழுத்தாளர்களின் சிறந்த சிருஷ்டிகளும், இருக்கின்றன என்று. அவர் அத்துடன் நிற்கவில்லை. மேலும் ஒரு படி தாண்டி புதுக் கதைகளைத் தயாரிப்பது எங்ஙனம் என்பதற்கும் வழிகாட்டுகிறார். அதாவது, நமதுசமூகத்திலுள்ள பல பிரச்னைகளைப் படரூபமாக்கிக் காட்டலாம் என்கிறார், பட முதலாளிகளுக்கு இதைவிட வேறு நல்லுபதேசம் தேவையில்லை என்றே கருதுகிறோம். சாதாரணமாகச் சுயமரியாதைக்காரர்கள் சொல்லக்கூடிய விஷயத்தைத்தான் பவநகர் மகாராஜாவும் சொல்லுகிறார். ஆனால் ஒரேவொரு வித்தியாசம் புதுக் கருத்துக்களைப் படமாக்க வேண்டும் என்று சொல்லும் அவர் அதே சமயத்தில் புராண இதிகாசங்களையும் தன்னுடைய பட்டியலில் சேர்த்துச் சொல்லுகிறார். இது பழக்கத்தின் பாற்பட்டது. ஆகவே, அதை மட்டும் விலக்கிவிட்டுப் பார்த்தால் பவநகர் உபதேசம் பயனுள்ள உபதேசம் என்றே சொல்லவேண்டும்.

## நம் நாட்டில் தாய்மொழிப் பற்று உண்டா?

மத்திய மாகாண அரசாங்கம் தன்னுடைய அரசாங்க மொழியாக இந்தியை அங்கீகரித்துக்கொண்டது. இந்தியா, ஜனநாயக நாடு என்று 1950 ஜனவரி 26-ந் தேதி பிரகடனப்படுத்தப்படும். அந்த நாள் முதல் மத்திய மாகாணம் தன் நாட்டு அரசாங்க மொழியாக இந்தியைக் கொள்ளும். இந்தி மத்தியமாகாணத்தவரின் தாய்மொழி. தங்கள் தாய்மொழியை அவர்கள் அரசாங்க மொழியாக ஏற்றது மிகவும் சரியான செயலே.

ஆனால் சென்னைமாகாணத்தார் அரசாங்க மொழயாகத் தமிழை ஆக்குவதற்குத் தயங்குவதேன்? பரீட்சார்த்த முறைகளைப் பார்ப்பதேன்? இங்கே தாய்மொழிப்பற்று ஆட்சிப் பீடத்தில் அமர வந்த எவருக்குமே இல்லையா?

## காணாததைக் காணுங்கள்

சென்னைமாகாணத்திலே, கோவை ஜில்லா உடுமலைப் பேட்டையில் ஒரு குடம் தண்ணீர் விலை 4 அணா கொடுத்து வாங்க முடியாதவர்கள் வீட்டில் தண்ணீர்ப் பஞ்சம், குடிக்கத் தண்ணீரில்லை.

ஆரணி ஓட்டல்களில் பல இடங்களில் வெல்லம் போட்ட காப்பிதான் கிடைக்கிறது. ஆனால், ஒரு ஓட்டல்காரர் கற்கண்டுக் காப்பி விற்கமுன்வந்திருக்கிறார்.

சென்னை ஓட்டல்காரர் ஒருவர் காப்பியில் சர்க்கரை போடுவதால் மதுமேக நோய் ஏற்படலாம் ஆதலால் சாகரின் போட்ட எங்கள் காப்பியையே சாப்பிடுங்கள் எனச் ‘சாகரின்’ போட்ட காப்பி விற்கிறார்.

போர்க்காலத்தில் அசாக்கிரதையாலோ, வேறு காரணத்தாலோ, பணம் சம்பாதிக்காமற்போய்விட்ட சிலர் அரசாங்கத்தை வாயார மனமார வாழ்த்தி, சர்க்கரையைக் கள்ள மார்க்கட்டில் விற்பதன்மூலம் தங்கள் வாழ்க்கையை இனிப்பாக்கிக்கொள்ளத் துவங்கிவிட்டிருக்கின்றனர்.

அரசாங்கம் இது போன்ற விஷயங்களில் தூக்கிவிடுவோம், கடுமையாகத் தண்டிப்போம் என்று வாயால் சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர, இதுவரை எந்த வியாபாரியும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதில்லை யாதலால், இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கை நழுவவிடக்கூடாதென்று மற்றையாரும் வாயில் நீரே, இத்துறையில் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

## அறிக்கை

ஏஜெண்டு தோழர்கள் பட்டியல் தொகையை பாங்டிராப்ட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பவேண்டுகிறோம்.

—மானேஜர்.

# சோவியத்-ஜெர்மன் சர்வாதிகாரம்?

## பிணத்தைப் பீடத்தில் காண்பதே பாசிசம்!

—(0)—

## முதலாளிகள் முடிதாங்க முலாம் பூசுவதே தேசீய ஒற்றுமை

[ 'காமரேட்' ]

"சோவியத் இரஷ்யாவிலும் சர்வாதிகார ஆட்சி தானே? அங்கேது 'ஜன நாயகம்'? நேர்மையான 'சனநாயகஆட்சி முறைக்கு அரசியலில இரு கட்சிகள் இருக்க வேண்டாமோ? அங்கே ஒரே கட்சியின் ஆதிககந்தானே இருக்கிறது? அங்கு. தனி நபர்களுககுச் சுதந்திரந்தான் ஏது? கூண்டில அடைப்புண்ட கிளியின் வாழ்க்கைபோல் தானே அங்குள்ள மக்களும் வாழ்கிறார்கள்? பாலும பழமும் பரிவோடுகொடுத்தாலும கூண்டுக் கிளிககுத் தன்னிச்சையாக வாழும் உரிமை ஏது? எனவே 'சோவியத்' சர்வாதிகாரத்திற்கும 'பாசீச' சர்வாதிகாரததிற்கும், வேற்றுமை ஏது?"

இத்தகைய கேள்விகள், எவர் உள்ளத்திலும் எழத்தான் செய்யும். இவைகடகு விடை தெரிய எவருக்கும அவா இருக்கத்தான் இருககும். எனககுத் தெரிநத வரை இவைகளை விளங்கச் சொலவது தான் இக்கட்டுரையின் நோக்கம்.

இரண்டாவது உலகப்போர் மூணடதும் சோவியத இரஷ்யாவும், நாஜீச ஜெர்மனியும 'அளவு கடத்தல் கூடா'தென ஓர் ஒப்பந்தஞ் செயதுகொண்டன. இரண்டுசர்வாதிகாரநாடுகளுக்கும் எள்ளத்தனை வேற்றுமை கூட கிடையாதெனும் தம தவறான கொளகை இதன் பயனாக வலியுறுத்தபபட்டு விட்டதாகச் சிலர் பலபல பேசினர். இருநத போதிலும் உலகததில வேறெநதப் பகுதியிலும இதுவரை நிறுவப்படாத ஒரு உயாதரமான நூதன 'ஜன நாயக' ஆடசி முறை சோவியத் நாட்டில் ஆக்கப்பட்டிருககிறதென்பதை ஒருவராலும மறுததற்கியலாது. நாஜீசத்திற்கும் கமயூனிசத்திறகும இருக்கும் அடிபபடை லடசிய வேற்றுமையின் காரணமாகச் சோவ்யத நாட்டின் மீது நாஜிய ஜெர்மனி. போர தொடுத்தே ஆகவேணடும். நாஜீசம் எழுந்ததே சோவியத் கமயூனிசததைச் சிதைன்பின்னபபடுததத்தான். நாஜீசம மறற ஏகாதிபத்திய அரசுகளின் அனைபையும ஆதரவையும்பெறறதும் 'பொது உடைமைப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டுத்தான். எனவே சோவியத் இரஷ்யா ஜெர்மனி மீது வலிய சண்டைக்குச் செல்லாததோடு, ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதின் மூலம் பிறர் படையெடுப்பைத் தகர்த்து நிற்கத் தனது இராணுவததை ஒழுங்காகச செப்டஞ்செய்து கொண்டது. தோழர் ஸ்டாலினுக்கு இருந்த இப்பேரறிவை உணர்ந்து கொள்ளாத காரணத்தாலோ, அல்லது உணர்ந்து கொண்டும் கொள்கை பிடிக்காததால சோவியத்தைப் பிறர் பழிப்புக்குள்ளாக்க வேண்டும் எனும் சிறுமதியாலோ, இருநடும் செய்து கொணட ஒப்பந்தத்திற்கு, இல்லாத பொருளை எடுத்துக கூறினர் இரு ஆட்சி முறைக்கும் வேற்றுமை இல்லையெனத திரித்துக் கூறினர். இரண்டு சாவாதிகாரத்திற்கும உள்ள வேற்றுமையை நாம் நன்கு தெரிநதுகொள்ள வேண்டுமானல், 'சனநாயகம, சுட்டிக்காடடும் மூலக் கொள்கைகள் எனன என்பதையும், சர்வாதிகாரம்' ஏற்றிருக்கும் பொருள் எனன என்பதையும நாம முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

தங்களைத் தாங்களே கவனித்துக் கொளவது தான, 'சனநாயகம்' எனும சொலலின பொதுக் கருத்தாகும் தலைக்குத தலை பெருதனமாக இருந்தால் ஆடசி முறை கேலிக் கூத்தாக இருக்கும் பெயரும் பொருத்தமற்றதாகிவிடும். எனவே தங்களில் சிலரைத் தங்கள பிரதிநிதிகளாக மக்கள் தோந்தெடுக்கின்றனர் இவ்வாறுபெருமபாலானமக்களால் தேர்நதெடுககப்படட பெரும்பான்மையோா நிறுவனததிற்குத்தான் 'அரசு' என்று பெயர். இத்ததைய அரசியல் முறையைத தான நாம தெரிநதிருக்கிறோம. அமெரிக்கா, இங்கிலாநது. பிரானஸ போன்றநாடுகளில் மேல் குறித்த 'சனநாயக' ஆடசிமுறை அனுபவததில இருக்கிறது. ஆனல் இதனை சனநாயகப என ஏறறுக் கொள்வதற்கில்லை. இம்முறை வெளித தோற்றத்திற்கு 'சன நாயக'மாகக் காடசியளித்தாலும், உண்மையான சனநாயகம் கருத்துக்கள் இதில இடம்பெற்றிருக்கவில்லை, மெய்யான ஜனநாயகத்திற்கும, பாசீசததிற்கும் இருக்கும வேற்றுமையைக கூட உணர்ந்துகொள்ள முடியாத அளவிற்கு, மேல் எடுத்துக காடடியுள்ள ஜனநாயக ஆடசி முறை நமககு மயக்கத்தைத் தருகிறது.

பெரும்பான்மையான மக்களால் தேர்நதெடுக்கப்பட்ட பெரும்பானமைப் பிரதிநிதிகளால் ஆளப்படும். ஆட்சி முறைக்குததான 'ஜனநான கம்' என்ற பெயர். பொருத்த முடையதெனக் கொள்வதானல் ஹிடலரும் முசோலினியும தங்கள சர்வாதிகாரததிற்கு அவர்கள் நாடுகளிலுளள பெரும்பாலான மககளின் வாககுகளைப் பெறவில்லை என்று சொலல முடியுமா? அவர்கள் தங்களைச் சன நாயகவாதிகளெனச் சொலலிக் கொள்ளாமல் சர்வாதிகாரிகளெத தஙகளுக்குப பட்டஞ் சூடடிக் கொணடது வேறு விஷயம. அந்நாடுகளிலுள்ள அதிகப்படியான மக்களின அனுமதியும், ஒத்துழைபபும் அவர்கள சர்வாதிகாரத்தனததிறகு இருந்துவிட்ட காரணததால், அவர்களையும் வெற்றிபெற்ற சன நாயக வாதிகளாகததானே கொள்ள வேண்டும்?

தன் பலத்தில் நம்பிக்கை கொள்ளாதவர்களும் சிந்தனை சகதியற்றவர்களுமாக இருககிறவாக்காளர்களைக்கொண்ட 'சனநாயகம' தோறறத்தில் இருக்கலாமே யன்றிக் கருத்தில இருக்க இடமில்லை. விஷயங்களைச் சீர் தூககிப் பார்த்து முடிவு காணுமஅறிவியல்பண்புதான உண்மையான சனநாயகத்தின் அஸ்திவாரம். தமக்கும் சிந்தனைசகதி இருக்கிறதென்பதைத தெரியாதவர்களின் வாக்களிக்கும் உரிமையால் நல்லபலன் ஏற்படாது. பதிலுக்குத்தீமைதான் விளைவு நபுஞ்சகன கை நாரிமணி-நாயிடம முழுத்தேங்காய்-குருடன் கை விளககு. உடையவனுக்குப்பலன் தாராத பொருட்கள.

ஐரோப்பிய சமுதாயம் நீணட சமுதாயப் புரட்சியின் விளைவாகததான சனநாயகத்தைப்பெயரளவிலாவது காண முடிந்தது. ஆண்டவனின படைத்தல் காததால்-அழித்தல் எனும் முததொழிலில் ஐரோபபிய மக்கள் கொண்டிருந்த மூட நம்பிக்கையில அவ நமபிககை ஏற்பட்ட பின்னர்தான பிரெஞ்சுப புரட்சியும் ஏற்பட்டது. அதன விளைவாகததான சனநாயகக் கருத்துகளும் அங்கு உருவாயின. மனித அறிவுககுப் புறம்பான சகதி வேறொன்று இருகக முடியாது என்று கணடு கொண்ட மக்கள்தான் சுயாடசியைப் பற்றிப் பேசத் தகுதியுடையவர்கள். முன்னுள் காடடுக்குக் கல் முள் நிறைந்த பாதையில் இடடுச் செல்லும் குருடனாக மட்டும் ஹிட்லர் இருக்கவில்லை. சனநாயகததிறகு அடிப்படையாகவேண்டப்படும மக்களுக்குள்ள அறிவியல் பண்பையே நசிக்கச் செய்து விட்டான். 'செமமறி ஆட்டு மந்தைகள்' என மக்களை வெளிபபடையாக அவன கொண்டான் பலமான பிரசார பலத்தினல் ஜெர்மன மக்களின் சிந்தனையைச் சிதறடித்து நாசக்கொள்கையில் நாடடத்தைச் செலலச்செய்து. அறிவுக்குப்பதில் ஆவேசததை வழித்துணையாக்கி. கானல் நீருக்கு விரைந்து செல்லும் மானினத்தின் நிலைக்கு, ஜெர்மன் மக்களை மாற்றிவிட்டான். ஹிட்லருக்குச் சிறு ஆதரவு இருக்கும் பொழுதே அவனிடததில அரசியல் அதிகாரம் வான ஹிண்டன் பர்க்கால் ஒப்படைக்கப்பட்டது. கிடைத்த அதிகாரத்தைக் கொணடு மற்ற முனனேற்ற சக்திகளைக் கருவறுத்து விட்டான். 'ஆரிய இனம ஆளப்பிறந்தது; மறற இனங்கள் அதற்கு அடிமையாக இருக்கப்பிறந்தன' எனும் இனவெறியை ஜெர்மன் மககளிடம் ஊட்டினன். வாா செய்ல்ஸ் ஒப்பந்தமும் அவனுடைய துவேஷப் பிரசாரத்திற்குத் துணைநின்றது தேசீய வெறியையும் திணித்தான் ஆண்டவனின் திருத்தூதன் என்றும், வழிகாட்டி என்றும் ஹிட்லரை ஜெர்மன் மககள் உறுதியாக எண்ணிவிட்டனர். ஜெர்மன் மக்களின் சிந்தனை சகதிக்குத் திரையிட்டு, தன்பால் மக்களின் ஆதரவைப் பெற்றான் ஹிட்லா.

தங்களைத் தாங்களே ஆளுவது தான் சனநாயகமாகுமானல், தங்களால் நிறுவப்படும அரசின் முடிந்த லட்சியம் என்ன என்பதை மக்கள் நன்கு அறிந்திருக்க வேண்டியது மிக மிக முக்கியமானதாகும். தங்களுக்குள்ள வறுமையையும் இதர இடுக்கண்களையும் ஒரு தலைவனே, சில தலைவர் என்பவர்களாலோ தீர்க்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில், தாங்களாக ஒரு திட்டத்தைத் திட்டவோ, வேறொருவர் குறித்த திட்டத்தின் நன்மை தீமைகளை உணர்ந்து முடிவுக்கு வரவோ, தகுதியற்ற மக்களால் தோற்றுவிக்கப்படும் எந்த அரசும், உண்மையான சனநாயக ஆட்சி முறையாக அமைவது, கடினமாகும். இது போன்ற ஆட்சி முறை தோற்றத்தில் சனநாயகம் போல் தோன்றினலும். சத்தில் சர்வாதிகார ஆட்சியாகத்தான் தீர்மானிக்க வேண்டும். சுயேச்சையாக சிந்திக்கும் பண்பை நமது மக்கள் போதிய அளவுக்கு இன்றும் பெருதகாலும் பிரெஞ்சுபுரட்சியால் பிரெஞ்சு மக்கள் பெற்ற விழிப்புணர்ச்சி போன்ற அனுபவ அறிவை மக்கள் அடையபெருததாலும் நமது நாட்டில் சனநாயகப் போர்வையில் பாசீச சர்வாதிகார ஆட்சி முறை நிறுவப்படுவதற்கே வாய்ப்பு இருக்கிறது. சனநாயகம் பேசும் காங்கிரஸ் தலைவர்கள் பலம் ஹிட்லர், முசோலினியைப் போற்றுவதும். சனநாயகத்தத்துவங்களுக்குப்புறம்பாகச்சனநாயகம் எனப் பசப்பி, மகாத்மாவின் மந்திர சக்தியை விளம்பரப் படுத்துவதும், அதன் விளைவாக ஏற்கெனவே நமது மக்களிடம் நிரம்பியுள்ள மூடநம்பிக்கையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதும் எதைக் காட்டுகிறது? சந்தேகத்திற்கிடமில்லாமல் ஜெர்மன் மக்களின் சித்தனை சிதறடிக்கப்பட்டது. இந்தியாவிலோ சிந்திக்கும் பண்பு மக்களிடம் வளர்ச்சி பெருமலே இருக்கிறது. ஆதலால் இந்தியாவில் மக்களின் மனம், கவைக்குதவாததும், தங்களுக்கே கேடு பயக்கக் கூடியதுமான மந்திர மகாத்மியங்களில் ஒன்றுபடுவதில் ஆச்சரியமில்லை!

சிந்தனை சக்தியும்' தன்னம்பிக்கையுந்தான் உண்மையான சனநாயகத்தின் அடிப்படையாகும். இந்த உயர்ந்த பண்பு நமது நாட்டில் துளியும்கிடையாது. இவை நிறைந்திருந்த மேல் நாட்டிலும் தங்களைத் தாங்களே ஆளுவது எனும் சொல் அலங்கார சனநாயகம் எதிர்பார்த்த பலனை உண்டாக்கவிலலை. ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கு எல்லாம் தேவையும் சாதனமும் ஒன்று போலவே இருக்க முடியாது பயிர் செய்யும் ஏழை உழவர்களுடைய தேவையும், அதை அடைவதற்காக அவர்களிடை உள்ள சாதனமும். மிராசுதார்கள் போன்ற நிலப்பிரபுக்களின் தேவையும், இருக்கும் சாதனமும ஒன்றை ஒன்று எதிர்க்ககூடியதாகும்இதைப் போன்றுதான் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களான முதலாளிகளுக்கும் முரண்பாடுடைய லட்சியங்கள் உண்டு. ஆதலால் 'விடுதலை, எனும் சொல் எல்லா மக்களுக்கும் ஒன்றுபோலவே பயன் தரக்கூடியதாக இருக்க முடியாது. எனவே பணம் படைத்தவர்களும், நிலம் படைத்தவர்களும ஆட்சி பீடத்தில். அசைக்க முடியாமல் அமர்ந்து கொள்வது மிக எளிதாகும். தங்கள் இஷ்டமபோல் மககளை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் தங்கள் கையில் இருககும காரணத்தால். பெரும்பாலான மக்கள் சிறுபான்மை யோரால் ஆளும் விபரீத ஆட்சியை அங்கு காணலாம. நிர்வாக அதிகாரிகளும் பெரிதும் பிரபுத்துவ மனேபாவம் அமையப்பெற்றவர்களே. அவர் ஒத்துழைப்பின் பலனுகவும், பணம் படைத்தவாகளின பிரசார பலத்தினலும் சாதாரண தேர்தலகளில் வெற்றி பெறுவது சாத்தியமாகிறது. ஏழை உழைவர்களும், தொழிலாளர்களும் தங்கள் வர்க்க ஸ்தாபனங்களை உருவாக்கிக்கொள்ளவும் 'அரசியல் பயிற்சிபெறவும்ஓரளவுககு வசதி இருந்த போதிலும, தேர்தல்களில் வெறறிபெறுவது முடியாத காரியம். காலப் போக்கில் முதலாளித்துவம் தனது முற்போக்கான பண்புகளை எல்லாம் இழந்துவிடுகிறது. பின்னர் அதன் பயனுக உண்டாகிற வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமையையும அதனுல் பரிகரிக்க முடியாமல் போய்விடுகிறது. பொருளாதாரவசதிஇருந்தும, அரசியல் அதிகாரம் கையிலிருந்தும், நாட்டு மக்களின் நலததைக்காப்பாற்றமுடியாததனுல், மக்களிடம முதலாளித்துவம் கொணடிருந்த ஆதிககமும்ஆட்டம்கொடுக்க ஆரம்பிக்கிறது. பெரும்பான்மையோரின் அன்பையும ஆதரவையும் ஆரம்பத்தில பெற்றதுபோல் நாளாக ஆகப்பெற முடியாததால், சொல்லவங்காரம் சனநாயகம் பேசி வந்த முதலாளித்துவம. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வகையைத்தேட முற்படுகிறது. இவ்வாறு தேடிபபெற்றதுதான் சேர்மனியின் நாசிசமும, இத்தாலியின் பாசீசமும் சனநாயக ஸ்தாபன மெனப் பெயரளவில் இருக்கிற ஆட்சி முறையும் அழிக்கப்படுகிறது. உழவர்கள் சங்கமும், தொழிலாளர்கள் சங்கமும் நசுக்கப் படுகின்றன. இவ்வளவும் 'தேசீய ஒற்றுமை', எனும் திரை மறைவில் நடிக்கும் முதலாளி தத்துவ நாடகமாகும். ஆனல் கமயூனிசமோ இதற்கு நேர் மாறானது. முதலாளித்துவம தனது முன்னேற்றச்சக்திகளையெல்லாம் இழந்து கிழடு தட்டி விட்டதால இனி அது மக்களிடை இருப்பதால் ஒரு பலனும் கிடையாதென்பது கம்யூனிசம். பிணத்தை ஆழக்குழி தோணடிப் புதைப்பது தான்முறை. ஆனல் பாசீசமோ பிணத்

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

## பட்டாபியின்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ளது. பட்டாபியாரின் [illegible]மும் கலைய ஆரம்பித்திருக்கிறது. மூவர் கமிட்டியின் தீர்ப்புக்குப் புது வியாக்கியானம் செய்ய ஆரம்பித்துவிட்டார் பட்டாபி.

மூவர் கமிட்டி அறிக்கையின் எந்தப் பகுதியிலும் சென்னை நகரின் எதிர்காலம் பற்றிக் குறிப்பிடப்படவில்லையாம். ஆந்திரர்கள் சென்னை நகர உரிமைக் கையைவிட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதால் 4 லட்சம் ஆந்திரரின் கதியைப் பற்றி அக்கரையற்று இருப்பதாகாதாம். அதாவது சென்னை நகர் மீது ஆந்திரர் வைத்திருக்கும் ஆசைக்கு மறைமுகமாக ஆதரவு தருகிறார் தோழர் பட்டாபி.

மேலும், பட்டாபியாரின் பேச்சிலிருந்து புலனாகும் மற்றொரு உண்மை சென்னை நகரைத் தனி மாகாணமாக்குவதாகும். பம்பாயைப்போல் சென்னையும் எதிர்காலத்தில் தனியாக்கப்படும் என்பது மூவர் கமிட்டி அறிக்கையில் தொக்கி நிற்கிறது என்பதை அவரே ஒப்புக்கொள்ளுகிறார். எனவே மூவர் கமிட்டியின் தீர்ப்பு என்பது, வடநாட்டார் பிடியில் சென்னை என்றும் நிலைத்திருக்கச் செய்யும் ஒரு சூழ்ச்சி என்பதும் இதனால் புலனாகிறது. அதுமட்டுமல்ல, ஆந்திரரின் பேராசை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையோடு மாத்திரம் நின்றுவிடாமல் அடுத்துள்ள சில தமிழ் மாவட்டங்களையும் ஆந்திர மயமாக்கி தமிழ் நாட்டின் அளவு எல்லை ஆகிய அனைத்தையும் சீர்குலையச் செய்வதாகவே யிருக்கிறது.

சென்னை நகரத்தில் 4 லட்சம் ஆந்திரர்கள் வாழுகின்றார்களாம். கோயமுத்தூர், சேலம் நகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, இராமநாதபுரம் முதலிய இடங்களில் 30 அல்லது 40 லட்சம் ஆந்திரர்கள் வாழுகின்றார்களாம். இது பட்டாபியார் தரும் கணக்கு. இங்ஙனம் கணக்கு காட்டுவதின் மூலம் ஆந்திரருக்குக் கருணையும் சென்னை தனி மாகாணம் என்று சொல்லுவதன் மூலம் வடநாட்டு ஆதிக்கத்துக்கு வழி திறந்து விடுவதுமான அரும் பணியாற்ற பட்டவர்த்தனமாக வெளி வந்துவிட்டார் பட்டாபியார். இதனைச் சுருங்கச் சொல்ல வேண்டுமானால், மூவர் கமிட்டி அறிக்கையின் மூடுமந்திரம் வெளியாகிறது என்றே சொல்ல வேண்டும்.

மேலும் பட்டாபியின் பரிபக்குவத்தைப் பாருங்கள். சென்னை ஆந்திருக்கு அல்ல என்று சொன்ன அவர் சென்னையையும் அதனை அடுத்துள்ள செங்கற்பட்டு மாவட்டமும் சேர்த்து தனி மாகாணமாக்க வேண்டும் என்கிறார். அதாவது சென்னையைத் தமிழர் உரிமை கொண்டாடாமலிருக்க செங்கற்பட்டு வரை அணை போடுகிறார்.

ஆகவே, இவை அனைத்தையும் கூர்ந்து நோக்கினால் தென்னாட்டின் சார்பில் பட்டாபியும் வடநாட்டின் சார்பில் படேலும், நேருவும் கூடி தயாரித்த ஒரு சூழ்ச்சித் திட்டம் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

## இனி நடப்பவை

சென்னை—கிருட்டிணம்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகம்:— புதன்கிழமை [2-11-49] காலை 8-30 மணிக்கு கழகக் கட்டிடத்தில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது மாவட்டக்கழகத்திற்கு உறுப்பினர் தேர்ந்தெடுப்பது பற்றியும், கழக துவக்க விழாப் பற்றியும் ஆலோசிக்கப்பட இருப்பதால் கழக உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வரும்படியாகத் தோழர் [விளம்பர உறுப்பினர்] கி. ராகவன், அழைக்கிறார்.

## முதலாளிகள் விஷயத்தில் தலையிட எங்களால் முடியவில்லை

### அமைச்சர் அழுகை

"பலவகையான தொழில்கள் முன்னேறவும் உழவுத் தொழில் வளர்ச்சியடையவும் மின்சாரசக்தி இந்த நாட்டிலே மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால், மின்சாரத்தை அதிகம் பரப்ப வெளிநாடுகளிலிருந்து மின்சாரப் பொருள்களை இறக்குமதிசெய்யத் தாமதமேற்படுகிறது. தனிப்பட்டவர்கள் நடத்தும் மின்சார ஸ்தாபனங்களை அரசாங்கமே எடுத்து நடத்தலாமென முன்வந்தால், இதைக்கண்டு அம்முதலாளிகள் பெருங் கூச்சலிடுகின்றனர். மத்திய அரசாங்கத்திடம் போய்ச் சொல்லுகிறார்கள். என்ன செய்வது?" என்று சென்னை மராமத்து இலாக்கா அமைச்சர் விருதுநகரில் பேசுகையில் கூறினார்.

இதுதான் காங்கிரஸ் ஆட்சிப் பீட அதிகாரத்தின் உண்மையான தோற்றம். முதலாளிகள் விஷயத்தில் இவர்கள் தலையிட்டால், உடனே அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் முறையிடுகின்றனர். எனவே முதலாளிகள் விஷயத்தில் தலையிட இவர்களால் முடிவதில்லை. ஏழை மக்களிடம்தான் இவர்கள் ஜம்பம் பலிக்கிறது என்பது இதனால் நன்கு விளங்குகிறதல்லவா? இந்தத் தோழர்கள்தான் ஏழைகளுக்காக உழைப்பவர்கள், பொது நலச் சேவை செய்பவர்கள் (பொது மேடைகளில் மட்டும்) என்பது நன்கு தெளிவாகிறதல்லவா?

## ஏழை மக்களிடம் வரி வாங்கும் முறை

### ஒரே பொருள் மீது மூன்று கட்டங்களில் வருமானம்

நவம்பர் 1-ந்தேதி முதல் மில் வாசல் விலை மீதுள்ள 20 சதவிகித லாப வரம்பு 14 சத விகிதமாகக் குறையும். இதனால், மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி என்பது போய், ஒரேவகை வியாபாரிகளே இருப்பார்களாம். இதனால் அரசாங்க வரி வசூலில் 60 லட்சம் ரூபாய் குறைந்துவிடுமாம். அதாவது இதுவரை ஜவுளிக்கு 3 கட்டங்களில் விற்பனை வரி வசூல் செய்துகொண்டிருந்தனர். இப்போது ஒரு கட்ட வரி வசூல் நின்றுவிடும். எனினும் இரண்டு கட்டங்களில் வரி வசூலாகும். இவ்வாறு ஒரே பொருள் மீது இரண்டு முறை மூன்று முறை என்றெல்லாம் வரி வசூல் செய்தும், அரசாங்கத்தின் பணப்பசி அடங்கவில்லை. பொதுவாக ஜவுளி வரியில் பெரும் பகுதி ஏழை மக்களிடமிருந்தே அரசாங்கத்துக்குப் போகிறது. உடுத்தும் உடையிலும் வரிவசூல் செய்யத் துணிந்த காங்கிரஸ் கட்சி ஆட்சிப்பீடத்தினர், நம்நாட்டிற்கு பயன்படுத்த முடிகிறதா என்றால் அதைத்தான் காணோம். நம்நாட்டில் வசூலாகும் பெரும்பகுதி வரிப்பணம் வடநாட்டிற்கு அர்ப்பணமாகிவிடுகிறதே.

## சோவியத்-ஜெர்மன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் புதைப்பதற்குப் பதிலாக, சிவிச்சிக் கெடுத்துச் சிங்காரித்துச் சிங்காதனத்தில் அமர்த்துகிறது.

உண்மையான சனநாயகத்தைக் கொலை செய்து முதலாளித்துவத்தை நிலைநிறுத்த பாசிசம் முயல்கின்றது; ஆனால் கம்யூனிசமோ சக்தி இழந்த முதலாளித்துவத்தைப் புறக்கணித்து உண்மையான சனநாயகத்தை ஏற்படுத்துவதில் ஈடுபடுகிறது!

அறிவியல்—பொருளியல்-அரசியல் முதலியவைகளில், பிறரை அடிமையாக்கி அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வேண்டும் எனும் நினைப்பில்லாத சமுதாய அமைப்பில்தான் உண்மையான சனநாயகத்தைக் காணமுடியும். இப்புது நிலையைச் சோவியத் கம்யூனிசத்தில்தான் காணமுடிகிறது. பொருளாதார உயர்வு தாழ்வுகள், பிறப்பால வேற்றுமைகள் இருக்கிற நமது சமுதாய அமைப்பில், பெருவாரியான மக்களுக்கு எந்தவித உண்மையான உரிமையும் இருக்க இடமில்லை. ஆதலால் உண்மையான சனநாயகமும் இருக்காது. தோற்றத்திலும் சரியே கருத்திலும் சரியே சோவியத் அரசியல் அமைப்பில் தான் உண்மையான சனநாயகம் இருக்கிறது. சமுகத்தின் பொருளாதார அமைப்பிலும், ஆட்சி அமைப்பிலும் இரஷிய மக்கள் பெற்றிருக்கும் உரிமை உலகத்தில் வேறெந்தப் பகுதியிலுள்ள மக்களும் பெற்றிருக்கவில்லை. சாதாரண குடி என்கிற முறையில் ஆட்சியிலும், உற்பத்தியாளன் என்கிற முறையில் தொழிற் சங்கங்களிலும் கூட்டுறவுப் பண்ணைகளிலும், உபயோகிக்கிறவன் எனும் முறையில் கூட்டுறவுஸ்தாபனங்களிலும், ஒவ்வொரு இரஷ்யனும் ஆதிக்கம் பெற்றிருக்கின்றான். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், திருப்பி அழைக்கவும் இரஷ்யன் உரிமை பெற்றிருப்பதோடு. தன் நன்மைக்காக இருக்கும் எல்லா ஸ்தாபனங்களைப் பற்றியும் குறை நேர்ந்தால் எடுத்துக்காட்டவும், வளர்ச்சிக்கான வகைகளைக் கூறவும் உரிமைபெற்றிருக்கிறான். அவனுடைய வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்படாமல் விரிவாக விளம்பரம் செய்யப்படுகின்றன. இதுமட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் செலவில்லாமல கல்வி போதிக்கப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் எனும் பேச்சே, அங்கு கிடையாது. உழைக்க முடியாத பருவத்திலும் நல்ல உணவுக்கு ஏற்பாடு உண்டு. நோய் நீக்க நல்ல மருத்துவம் தரப்படுகிறது. தனது குழந்தைகளின் எதிர்காலத்தில் ஒவ்வொருவருக்கும் நல்ல நம்பிக்கை இருக்கிறது. வறுமையும், பிறப்பும் இங்கு ஒருவனின் திறமையைத் தடை செய்வது போல் அங்கில்லை.

'மக்கள் மக்களால் ஆளப்படும்' சனநாயக முறையை அங்கு பார்க்கிறோம். ஆனால் மற்ற நாடுகளிலெல்லாம் விரல் விட்டு எண்ணக்கூடிய சிறு கூட்டத்தினர் சனநாயகத்தின் பெயரால் ஆளுவது வெளிப்படை. கலைப்பண்பு எனச்சொல்லப்படுவது அங்கு எல்லா மக்களின் உள்ளங்களையும் படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கிறது. ஆனால் இங்கோ ஒரு கூட்டத்தார்க்கு உயர்வு தருவதாகக் கலைப்பண்பு இருக்கிறது. தோற்றத்திலே வெண்மையாயினும் சுண்ணாம்புக்கும் வெண்ணெய்க்கும் வேற்றுமை உண்டு.

### சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர், மாலைமணி


### விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம் ரூ5—0—0
நீண்ட கால ஒப்பந்தவிளம்பரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்



K. R. ராமசாமியின்
கிருஷ்ணன் நாடக சபையாரின்
நாடக விழா ஆரம்பம்

ஈரோடு "அர்ச்சுனன் அரங்கில்"
1—11—49 செவ்வாய் முதல் தினசரி

"ஓர் இரவு"
(நாடகம்)

அறிஞர் C. N. அண்ணாதுரை M.A., எழுதிய
தமிழ் நாடக உலகின் மறுமலர்ச்சி இலக்கியம்
தினசரி இரவு 10-மணிக்கு — ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
(திங்கள் விடுமுறை)

கட்டணம்:- 2-8-0, 1-8-0, 0-12-0, 0-6-0.


## சர்க்காரும் சர்க்கரையும்

சர்க்கரைக்கு மக்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. இந்நிலையில் பங்கீட்டு முறைப்படி சர்க்கரையை வழங்க அரசியலார் முன் வந்திருக்கின்றனர். இந்தப் பங்கீட்டு முறையைப் பார்க்கின்றபோது மக்களைப் பிடித்திருக்கும் சர்க்கரைத் தொல்லை விரைவில் அகலும் என்று நம்புவதற்கில்லை. கடந்த ஒரு மாதமாக மக்கள் படும் கஷ்டங்களைக் கண்ணாரக் கண்டிருந்தும், அரசியலார் அது பற்றி அவசரமான நடவடிக்கை எதும் எடுக்காமல் பயனற்ற விதத்தில் சர்க்கரையைப் பங்கிட முன் வந்திருக்கின்றனர்.

30-ம் தேதிமுதல் அரிசி பங்கீட்டுக் கடைகள் மூலம் சர்க்கரை வழங்கப்படுமாம். பங்கீடு என்றவுடன் தேவைக்கேற்றபடி பங்கிடுவது என்று கருதிவிடாதீர்கள். மக்களுடைய தேவையைப் பற்றி அரசியலாருக்குக் கவலை யிருப்பதாகத் தெரியவில்லை. நிலைமையைச் சமாளிக்க ஏதோவொரு கண் துடைப்பு வேலை செய்ய வேண்டும் என்ற அளவிலே, பங்கீட்டு கார்டு ஒன்றுக்கு அரை வீசை சர்க்கரை வீதம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றனர். அவசரமாகவும், அவசியமாகவும், திருத்தமாகவும் செய்ய வேண்டிய ஒரு காரியத்தை எவ்வளவு அலட்சியமாகவும், அவசரப்படாமலும், அரைகுறையாகவும் செய்கிறது பாருங்கள் இந்த அரசாங்கம்!

ஆனால் இது தற்காலிக ஏற்பாடு தான் என்கின்றனர். உணவு மந்திரியும் மற்ற மந்திரிகளும் ஊர் சுற்றப் போயிருக்கிறார்களாம்; சீக்கிரத்தில் திரும்பிவிடுவார்களாம். வந்தவுடன் நிரந்தர ஏற்பாடு செய்யப்படுமாம். அது வரையில் அரை வீசைதானாம்! மனிதர்களுக்கல்ல சர்க்கரை; கார்டுகளுக்கு! ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் சரி, அவர்களின் குறைந்த அளவு தேவை எவ்வாறிலும் சரி அதைப்பற்றி அரசியலார் கவலை கொள்ளாமல் கார்டுக்கு சர்க்கரையைக் காட்டும் கண்ணியத்தை என்னவென்று சொல்லுவது!

எனவே, இந்த நிலைமை மேலும் நீடிக்க விடாமல் அடுத்தவாரத்திற்குள்ளாகவேனும் சரியானபடி சர்க்கரைப் பங்கீட்டு முறையை அமுலுக்குக் கொண்டுவந்து மக்களுடைய தொல்லையை நீக்கவேண்டும். ஊர் சுற்றும் மந்திரிகள் திரும்பி வந்து திட்டம் தீட்டுவதென்றால் அது எளிதில் ஆகக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. அவர்கள் வருவது எப்போது, சர்க்கரைத் தொல்லை நீங்குவது எப்போது? ஆகவே, அரசியலார் சற்று அவசரத்துடன் காரியங்களைக் கவனிப்பார்களாக. ஏனென்றால் மக்கள் சாக்காரல்லவா?

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| 3 மாதம் சந்தா | ரூ | 6—0—0 |
| 6 மாதம் சந்தா | ,, | 12—0—0 |
| ஒரு வருடசந்தா | ,, | 24—0—0 |

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


விற்பனைக்குத் தயார்!

அர்ச்சுனன் நிலைய வெளியீடுகள்

ஆசிரியர் என். இ. பாலகுரு எழுதிய

| | |
|---|---|
| புரட்சி முரசு ... | 0—8—0 |
| அனுதைகள் ... | 0—8—0 |
| மக்கள் ஆட்சி ... | 0—4—0 |
| தமிழகம் இழந்த தளபதி | 0—4—0 |
| அமுதவல்லி ... | 0—2—0 |

வியாபாரிகட்கு 25%. கழிவு தரப்படும்.

விபரங்கட்கு:— மானேஜர், அர்ச்சுனன் நிலையம், ஈரோடு.


Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.